www.akaram.eu

# AKARAM
# அகரம்

இலவச தமிழ் மாத இதழ்

சுவடி : 9.12 திருவள்ளுவர் ஆண்டு 2053 | 14.07.2022 - 13.08.2022 | ISSN : 2195-6480



## புலிகளின் மீள் உருவாக்கமென்ற பூச்சாண்டி

அகரம் 12 ஆண்டு

## அதிகாரப் பசிக்குப் பலியாகப் போகும் புலம்பெயர் மக்கள்

## என்று முடிவுக்கு வரும் உக்ரைன் போர்

FREE Magazine

## “மேன்மை கொள் தமிழர் நீதி விளங்குக உலகமெல்லாம்”

FREE CIRCULATION : GERMANY, SWITZERLAND, FRANCE, ENGLAND, DENMARK, NORWAY, HOLLAND, SWEDEN, ITALY, CANADA


Dortmund மாநகரில் மளிகை உலகின்
BIGG BOSS
TKS
BEST FOODS
~~149€~~
பெறுமதியுள்ள
V BOX
119€*
கிடைக்கும்
Branded Masala
Canned Foods
Rice
Fresh Vegetables
Fresh Sea Foods
Green Vegetables
மலிவும் தரமும் என்றும் உங்கள் TKS
Haldiram's
Aachi
The Mother of Good Taste
Elephant House
GRB
TRS
Tilda
Legendary Rice
Maliban
MTR
Rheinische Str.79-44137-Dortmund
tksbestfoods
0049 231 950 468 83
www.tksbestfoods.de
tks-bestfoods@web.de

ortel MOBILE







## 20 countries

### 250 minutes

250 minutes from Germany to 20 countries.

250 minutes from Germany to EU

Internet Flat Highspeed up to 8 GB

Secure your + 5 GB bonus with the Ortel Mobile app (offer ends 15 december 21)

Surf and make calls within the EU

National Flat call rate

Now for 4weeks for "

**19,99€***




## Germany Flat

### 15 GB Internet

National Flat call rate

500 minutes from Germany to EU


Internet Flat 15 GB Highspeed

Secure your +5 GB bonus with the Ortel Mobile app (offer ends 15 december 21)

Surf and make calls within the EU

Now for 4weeks for "

**24,99€***




## 11 GB Internet Flat


Highspeed up to 11 GB

Secure your + 5 GB bonus with the Ortel Mobile app (offer ends 15 december 21)

Internet telephony available
Surfing the Internet within the EU

Now for 4weeks for "

**19,99€***



**OHNE PAUSE NACH HAUSE.**

Ortel. Wir sprechen Deine Sprache.

Google play · App Store

Aufladbar mit: ortel MOBILE, O2, e-plus




AKARAM

# அகரம்

மாதாந்த இதழ் Monthly Magazine

14 ஆடி 2022 - 13 ஆவணி 2022

சுவடி / ISSUE 9.12



**தலைமை ஆசிரியர்**

திரு. **த. இரவீந்திரன்**

**உதவி ஆசிரியர்**

திரு. **வன்னித்தம்பி**

**ஆசிரியர் குழு**

திரு. பவித்திரன் (இலங்கை)
திரு. தயாபரன் (இலங்கை)
திரு. எதிர்மன்ன சிங்கம் (சுவிஸ்)
திரு. சண் தவராஜா (சுவிஸ்)
திரு. அறிவழகன் (ஜெர்மனி)
திரு. கண்ணன் (இந்தியா)

**நிழற்படப் பிரிவு**

திரு. வியாசன்
செல்வி. கயல்விழி

**ஒப்பு நோக்குனர்**

திரு. அர்ஜுன் (ஜெர்மனி)



**தொடர்புகளுக்கு**

**European Tamils Union e.V.**
**PO. Box 13 06 31,**
**44316 Dortmund,**
**Germany**

**Tel: 00 49 176 47 11 87 11**

Email: editor@akaram.eu



ISSN 2195-6480

**www.akaram.eu**



No part of this publication may be reproduced, copied or transited in any form or by any means or stored in any information storage or retrieval system without the publisher's written permission.

©ETU e.V. 2014.
All rights reserved.


## நுழைவாயில்...

**'அகரம்' வாசக அன்பர்களுக்கும், விளம்பரதாா வள்ளல்பெருமக்களுக்கும் எல்லா நலமும், வளமும் பெருக இறையருளை வேண்டுகிறது.**

தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும், புலிகள் அமைப்பு தனி அரசு நோக்கிய ஜனநாயக வழிகளையும் முடக்கிய பெருமை, எங்கள் போலித் தமிழ் தேசியவாதிகளின் பங்களிப்பு இருந்ததை யாரும் குறைத்து மதிப்பிட முடியாது.

அதிலே 1990களில் உலக நாடுகளில் அரசியல் பிரச்சார வெள்ளோட்டம் விட்டு, உலகப் பிரபலம் கண்டவர் யாழ் அருட் தந்தை யோசப் இமானுவல் அடிகளார். அவருடைய தலைமைப் படகோட்டிய உலக நாட்டுத் தலைவர்களின் அருட்பார்வை பெற்றவர்தான் சுரேன் சுரேந்திரன். தமது அருட்பணி முத்துக் கொண்ட திருப்தியுடன் அவரது தரிசனங்கள் நின்று விட்டன போலும்.

அதனால் சுரேன், சுமந்திரனுக்கு இப்படித்தான் காட்டிக் கொடுக்க வேண்டும் என்று மதியாபரணம் சுமந்தினுக்குக் கீதஉபதேசம் செய்யும் காட்சியை இங்கே பார்க்கிறோம்! இருவர் முகங்களிலும் பொங்கி வழியும் உணர்வலைகளைப் பார்த்தாலே தெரிகிறது இந்தியாவும், உலக நாடுகளும் இவர்களின் சுட்டு விரல் அசைவில் மாட்டிக் கொண்ட உண்மை.

இலங்கை அரசியல் இப்பொழுது முற்றிலுமாக தமிழ் இன அழிப்பில் சிங்களத்துக்கும், இந்திய,





அமெரிக்க, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கும் ஆதரவாகச் செயற்பட்ட தமிழின விரோதிகளின் பிடியில் சிக்கிக் கிடக்கிறது. தமிழினப் பகை அமைப்புகளின் தலைவர்களின் நினைவு நாட்களைத் தவறாமல் தமிழ் மக்கள் மத்தியில் கொண்டாடப்படும் பிரச்சார உத்தி, மின்னல் வேகத்தில் இடம் பெறுகின்றன. அரசாங்க உதவிகளும், பதவிகளும் அவர்களிடையே பங்கு போடப் படுகின்றன. இந்திய அரசின் புட்டிப்பால், தாய்ப் பாலை மிஞ்சும் அளவுக்கு இலங்கையை மூழ்கடித்து வருகிறது.

பல ஊழல்கள், மனித உரிமை மீறல்கள், சித்திரவதைகள், படு கொலைகளின் நாயகன் ரணில் விக்கிரமசிங்க, இன்று பிரதமர் பதவி என்கிற முள் கிரீடத்தைப் போன்று சுமக்கிறார் என்கிற தொனியில் இந்திய இதழான 'விகடன்' அழுது புலம்புகிறது.

காசி ஆனந்தன், சிவாஜி லிங்கம், மறவன்புலவு சச்சிதானந்தன் போன்ற இந்தியாவின் கூண்டுக் கிளிகள் புதிய அரசியல் சங்கீத விழாக்களை நடத்து கிறார்கள்.

**"சுதந்திரம் என்ன சுக்கா, மிளகா? கடையில் வாங்கிவிட"** எனப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் வரிகளைப் பாடி,




அரசியல் நடத்தியவிகளின் இன்றைய நிலை இப்படியாய் குட்டிச் சுவரில் முட்டிக் கிடப்பதை நாம் எவ்வாறு சரி செய்யப் போகிறோம்?

மீண்டும் வரும் வரை விடை பெறும்...

**ஆசிரியர், அகரம் குழுமம்**



**த. எதிர்மன்னசிங்கம்**





# ரணில் விக்கிரமசிங்க தானா சிவராம் குறிப்பிட்ட ஜோஜியாவின் மார்க்கிய வல்லி?

*14.12.2003* வீரகேசரி வார வெளியீட்டில், பிரபல சர்வ தேச பிராந்திய அரசியல் இராணுவ ஆய்வாளரும், விமர்சகருமான திரு. தராகி சிவராம் "சர்வதேச வியூகங்களே தமிழீழம் எதிர் கொள்ள வேண்டிய சவால்" என்கிற தலைப்பில் ஒரு தூர நோக்கப் பார்வை நிறைந்த கட்டுரையை வரைந்திருந்தார். இன்று *2009* மே தமிழ் இன அழிப்புப் போரைக் கடந்து *12* வருடங்களான நிலையில், தீர்க்க தரிசனம் நிறைந்த அவரது கட்டுரையை, தமிழ் இனம் மீள் பார்வை செய்ய வேண்டியக் கட்டாயத்தை 'அகரம்' உணர்ந்து இப் பத்தியைப் பிரசுரிக்கிறது.

*2003*ல் சோவியத் யூனியன் ஜோர்ஜ்ஜியா தொடர்பாக கொடுக்க வேண்டிய அரசியல் இராணுவ கேந்திர முக்கியத்தைக் குறைவாக எடை போட்ட காரணத்தால், *2022*இல் அது உக்கிரெயின் போராக ரஷியாவின் இருப்புக்கு ஆபத்தாக மாறி நிற்கிறது.



'ஜோர்ஜ்ஜியாவின் பிராந்திய ஒருமைப்பாடு எவ்வகையிலும் பேணப்பட வேண்டும் என்பது, அந்நாட்டிலிருந்து பிரிந்து செல்ல முனையும் தெற்கு ஒசற்றியா மற்றும் அஜாரியா ஆகிய பிராந்தியங்கள், தமது சுய உரிமைக் கோட்பாட்டைக் கைவிட வேண்டும் எனவும் அமெரிக்கா வற்புறுத்தி வருகின்றது. (இவை சிவராமின் வரிகள்.)

'ஜோர்ஜியாவிலும், இலங்கையிலும் தமது உரிமையை நிலைநாட்ட முனையும் இனங்களுடைய சுயநிர்ணய உரிமையை மறுப்பதற்கும், பல்வேறு வழிகள் மூலம் தடுப்பதற்கும் அமெரிக்கா கொண்டிருக்கும் காரணம் ஒன்றே.

கஸ்பியன் கடலில் உள்ள பெருமளவு எண்ணெய் வளத்தைக் கையகப்படுத்தி,




அங்கிருந்து நெடுந்தூரக் குழாய்களின் ஊடாக அந்த எண்ணெய் வளத்தைத் தனது நேச நாடான துருக்கிக்கும், மத்திய தரைக் கடலிலுள்ள தனக்கேதுவான துறைமுகங்களுக்கும் கொண்டு செல்வதற்கு, இன்றியமையாத வகையில் ஜோர்ஜியா அமெரிக்காவுக்குத் தேவைப் படுகிறது.

பயன்படுத்தப்படாமலிருக்கும் மத்திய ஆசியாவின் பெரும் எண்ணெய் நிலவாயு வளங்களை வெளிக் கொணருவதற்கு, இன்றியமையாத இடைநிலை வழியாக ***(Oil Transit Route)*** ஆப்கானிஸ்தானை அமெரிக்கா கருதியது. ஆப்கனிஸ்தானில் இவ்வாறான ஒரு எண்ணெய் பெரும் குழாயை அமைப்பதற்கு முயன்று கொண்டிருந்த உனோகால் ***(Unocal)*** என்ற அமெரிக்கக் கம்பனியின் ஆப்கான் பிரதிநிதியாக இருந்தவரரான கமீட் காசாய் என்பவரை, அந்நாட்டின் மீது படையெடுத்து, அங்கிருந்த தலிபான் அரசை முறியடித்த பின்னர் அமெரிக்கா பொம்மை ஜனாதிபதியாக நியமித்த விடயம் நாம் அறிந்தவையே!.

அது அமெரிக்காவுக்கும், அதன் கூட்டு நாடான ஜப்பானுக்கும் பாதுகாப்பாக எந்த ஒரு சூழ் நிலையிலும் கொண்டு செல்லப் படுவதாயின் இலங்கை அரசியல் தளம்பல் பிரிவினைச் சிக்கல் என்பன இல்லாத ஒரு நாடாக இருக்க வேண்டும் என்பது, அமெரிக்காவின் அவா. அது மட்டுமின்றி நவீன மயப்படுத்தி வளர்ப்பதற்காக, தத்தமது பிராந்தியங்களுக்கு அவ்வளங்களைத் தடையின்றிக் கொண்டு செல்வதற்கும், தனக்குப் போட்டியாக ஐரோப்பிய யூனியன் ,சீனா, இந்தியா, ரஷியா ஆகிய நான்கும் செயற்பட்டு வருகின்றன, செயற்படப் போகின்றன என அமெரிக்கா கடந்த பல ஆண்டுகளாக மிகக் கவனம் கொள்கின்றது.

இத்தகைய பின்புலப் பார்வையில் எப்படி அமெரிக்கா திட்டமிட்டு, இலங்கை அமைதிப் பேச்சுகளை முடக்கி முறியடித்து, தமிழின அழிப்பை நடத்தி முடித்தது என்பதை நாம் அனைவரும் 2009 தொடக்கம் இன்று வரைக்கும் பார்த்து வருகிறோம்.



இவற்றின் அடிப்படையில் அன்றைய கட்டுரையில் 'கஸ்பியன் கடலில் ஜோர்ஜியாவைப் போன்றே இந்து சமுத்திரத்தில் தமிழீழம் உள்ளது என்கிற சமன்பாட்டுக்கு திரு.சிவராம் வந்து... .“புலிகளின் கட்டுப் பாட்டிலுள்ள தமிழீழப் பிராந்தியம், யாருக்கும் கைப் பாவையாகாமல் இருப்பதே அமெரிக்கா இந்து சமுத்தரப் பிராந்தியத்தில் வகுக்கும் கேந்திர வியூகத்திற்கும், அதை முறியடிக்க இந்தியா எடுக்கும் முயற்சிகளுக்கும் சிக்கலைக் கொடுக்கிறது.

சிறிலங்கா படைகளைத் தனது செல்வாக்கினுள் கொண்டு வருவதற்கும். பயங்கரவாதத்துக்கு எதிரான பயிற்சி என்ற போர்வையில், அவற்றோடு தொடர்ந்து இறுக்கமான உறவைப் பேணுவதற்கும் தனது வெளிநாட்டுப் பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் வைத்திருப்பது அமெரிக்காவுக்குக் கட்டாய தேவையாக உள்ளது.

இலங்கை இனப்பிரச்சினையில் தீர்வு எவ்வாறு அமைய வேண்டும்? என வெளியார் தீர்மானிக்க முடியாது என, இந்தியா அடிக்கடி வலியுறுத்துவதும், எமது போராட்டம் சர்வதேச வியூகங்களை எதிர்கொண்டு எவ்வாறு வரலாறுபடைக்கப் போகின்றோம்? என்பதே எம்முன் இன்றுள்ள சவாலாகும் என முடித்துள்ளார் ஆய்வாளர் சிவராம்.

2009 இல் போர் முடிந்தும், முடியாமலும் தமிழ் மக்களைத் தொடரும் நிலையற்ற அரசியலால் பல நாடுகளும், பல தேர்தல்களை நடத்தியும் எந்த நல்ல முடிவும் எட்டாத நிலையில், நாட்டின் செல்வங்களை எல்லாம் கொள்ளை அடித்து, நாட்டை பாழடித்தவர்களில் முதன்மையானவரான ரணில் விக்கிரம சிங்கவே நாட்டைக் காப்பாற்றும் பொறுப்பில் அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட வெளிநாடுகள் ஒப்படைக்க முயல்வதைக் காண முடிகிறது.

மனிதஉரிமை மீறல், இலஞ்சம், ஊழல் உட்பட அனைத்து சிறப்புகளையும் கொண்டுள்ள ரணில் விக்கிரமசிங்க என்கிற தனி மனிதரிடம் நாட்டை ஒப்படைக்க முன் வருவதைக் காணும் பொழுது, சிவராம் 2003இல் குறிப்பிட்ட இலங்கையில் அமெரிக்கா உருவாக்கி வரும் சாக்கஸ்விலி ரணில் விக்கிரசிங்க எனப்படும் வெள்ளைக் காரக் கொள்ளையனா? என்கிற சந்தேகம் வலுப்பெற்று வருகிறது. எந்த வித அரசியல் பொருளாதார சமரசங்களுக்கும் தமிழ் மக்கள் சிங்களத்துடன் போய்விடக் கூடாது என அகரம் எச்சரிக்கிறது.







Baslerstrasse 102
8048 Zürich
Tel : 043 343 03 55
Fax : 043 343 03 56

Kranichweg 8
3074 Muri bei Bern
Tel : 031 951 24 44

எமது புதிய கிளை
EO Tychboden Parkweg 2
4665 Oftringen
வெகுவிரைவில்...

# IMPOrtas

*International Foods & Beverages*

www.importas.ch
info@importas.ch

**மொத்த விற்பனை நிலையம்**

Schwaresterstrasse 2, 5604 Hendschiken

Sales : 052 672 28 38 , Admin : 052 672 28 34, Fax : 052 672 28 39
info@subash.ch www.subash.ch

கல்லெறி வேலுப்பிள்ளை

# “என்ன கொடுமை சரவணா!”



## வணக்கம் பாருங்கோ, எப்பிடி சுகமா இருக்கிறியளே...?

**எப்பிடி இருக்கிறியள்? நான் இருக்கிறன் பாருங்கோ. காலங்காத்தால எழும்பின நல்லாத்தான் இருக்குது. ஆனால் ஊரில சனம் எரிபொருளுக்கு அடிபடுகிறதை பார்த்தால் தலை சுத்துது கண்டியளோ. எங்கடையள் அரிசி மாவுக்கு அடிபடுறதில ஒரு நியாயம் இருக்கு கண்டியளோ. அதேமாதிரி பயணிகள் போக்குவரவு ஊர்திகள் வைச்சிருக்கிறவையும் எரிபொருளுக்கு அடிபடுகிறதில ஒரு நியாயம் இருக்கு கண்டியளோ. ஆனால், ஒன்றுமே இல்லாமல் வெளிநாட்டில இருந்து வாற காசில சொகுசு ஊர்தி வாங்கி வைச்சிருக்கிறவையும், விலைகூடின உந்துருளி வைச்சிருக்கிறவையும் ஏன் அடிபடுகினம் எண்டு தெரியேல்லை.**

தாங்கியை நிரப்பிக்கொண்டு போய் ஊர் உலாத்தத்தானே போகினம். அதைவிட நோயாளர் காவு ஊர்திகளுக்கும், பயணிகள் போக்குவரவு ஊர்திகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து எங்கட சொகுசு ஊர்திகளைத் தவிர்க்கலாம் தானே. ஆனால் அந்தச் சிந்தனை எல்லாம் வராது கண்டியளோ. ஊர் பட்டினியில செத்தாலும் நாங்கள் சொகுசா திரியவேணும் எண்ட எண்ணம் உலகத்திலேயே எங்கட ஆட்களுக்கு மட்டும்தான் இருக்குப் பாருங்கோ. எட அங்கதான் அப்பிடி எண்டு பாத்தால், இஞ்ச ஐரோப்பிய நாடுகளில வாழுற எங்கட ஆட்களும் அப்படித்தான் பாருங்கோ. ஆக மொத்தத்தில் எங்கட சனம் திருந்தாது எண்டது உண்மைதான் கண்டியளோ.

விசயம் என்னெண்டா பாருங்கோ, நான் கொரோனா காலத்தில ஒரு கொண்டாட்டத்துக்கும் போகேல்லை. யாரும் தெரிஞ்ச ஆக்கள் அழைப்பிதழ் தந்தாலும், எனக்கு கொஞ்சம் தும்மலாக் கிடக்கு எண்டு சொல்லிப்போடுவன், பிறகு அவையளே என்னை வரவேணாம் எண்டு சொல்லிப்போடுவினை. இந்த விளையாட்டை இரண்டு வருசமா செய்து ஒரு கொண்டாட்டத்துக்கும் போகாமல் தவிர்த்து வந்தனான் பாருங்கோ.

ஒரு கொண்டாட்டத்துக்குப் போனால் முழுநாளும் அங்கேயே கரைஞ்சிடும் பாருங்கோ. அதனால கொண்டாட்டங்களுக்கு போகாமல் வீட்டிலேயே இருந்திடுவன் கண்டியளோ. வீட்டில இருந்து என்ன வெட்டிப் புடுங்கிறனீர் எண்டு கேக்குறது விளங்குது பாருங்கோ. ஆனால்

எங்கட சில ஆக்கள் நடத்துற கொண்டாட்டங்களுக்கு போய் வதைபடுறதை விட, வீட்டில வெட்டியா இருக்கிறது மேல் கண்டியளோ.

அப்பிடித்தான் பாருங்கோ எனக்கு ஒரு கலியாண வீட்டுக்கு அழைப்பு வந்துது. அதுவும் தெரிஞ்ச ஆக்கள். எனக்கு ஒரே தும்மலாக்கிடக்கு எண்டுதான் சொல்லிப் பாத்தன். அதுகளோ விடேல்லை. வீட்டில இருந்து தும்முறதை அங்க வந்திருந்து தாராளமா தும்மும் எண்டு சொல்லிப் போட்டுதுகள். ஒண்டும் மறுக்கேலாமல் போனன் பாருங்கோ. காலை 10.00 மணிக்கே வெளிக்கிட்டு மண்டபத்துக்குப் போட்டன் பாருங்கோ. பத்தரைக்குத் தாலி கட்டு எண்டு அழைப்பிதழில குறிப்பிட்டு இருந்துது. அங்க போக அப்பதான் ஐயர் வந்து கும்பத்துக்கு நூல்விடுறார். ஐயாமார் நூல்விடுற அழகை பாத்துக்கொண்டு இருப்பம் எண்டுட்டு மணவறைக்கு கிட்டவாக ஒரு கதிரையில இருந்தன் பாருங்கோ.

ஐயர் நூல்விட்டு முடிஞ்சு, சனமும் வந்திட்டுது. நேரமோ 11.00 ஆகீட்டுது பாருங்கோ. அதாவது தாலி கட்டு நேரம் முடிஞ்சுது பாருங்கோ. மாப்பிள்ளையை காணேல்லை. எங்கடா மாப்பிள்ளை எண்டு ஐயர் அந்தரப்படுறார். குறித்த நேரத்துக்குச் செய்யவேணும் எண்டுறதில ஐயர் எவ்வளவு அக்கறையா இருக்கிறார் எண்டு நினைச்சு எனக்கு புல்லரிச்சுப் போச்சுது கண்டியளோ. ஆனால் பிறகுதான் கேள்விப் பட்டன், ஐயர் 01.30 க்கு வேறொரு கலியாணத்துக்கு போகவேண்டி இருக்குதாம்.

ஐயர்வாள் எல்லாம் தங்களுக்கு ஏற்றமாதிரி குறிக்கிறதுதான் நல்ல நேரமும் கூடாதநேரமும் எண்டு பலர் சொல்லி கேள்விப்பட்டதுண்டு. இஞ்ச தான் கண்ணால பாத்தன். சரி அவையின்ர தொழிலை நாங்கள் ஏன் கெடுப்பான். மாப்பிள்ளை மாப்பிள்ளை எண்டு எல்லாரும் தேடிக்களைச்சு கடைசியா மாப்பிள்ளை மண்டப வாயிலுக்கு வந்திட்டாராம் எண்டு சொல்லி, கொஞ்சப் பேர் அவரை வரவேற்க வாசலுக்கு ஓடிச்சினை.

போனவை ஒருத்தரையும் அரைமணி நேரமா காணேல்லை எண்டு இன்னும் கொஞ்சப் பேர் அவையைத் தேடிப் போட்டினை. கடைசியா என்னடா




ஒருத்தரையும் காணேல்லை எண்டு நான் எழும்பி வாசலுக்குப் போனன் பாருங்கோ. அங்க எல்லாரும் வரிசையில நிக்கினம். அங்க பாத்தால்

மாப்பிள்ளை வந்திட்டார். ஏன் உள்ளுக்கு வராமல் வெளியிலேயே நிக்குறார், கடைசி நேரத்தில முடிவை மாத்திப்போட்டாரோ எண்டு கேட்டன். அவர் வரேக்க வாசலிலே வெடி கொழுத்த இருந்தவையாம். அந்த வெடி எல்லாம் பொம்பிளை அழைச்சு வாற ஊர்திக்குள்ளையாம். அதனால பொம்பிளை வரும் மட்டும் எல்லாரும் காவல் நிக்கினமாம் எண்டிச்சினை. சரியெண்டு கொஞ்ச நேரத்தில பொம்பிளையும் வந்திட்டா பாருங்கோ. பிறகு அவ வந்த ஊர்தியில இருந்த வெடி எல்லாத்தையும் எடுத்தது வாசலில கொளுத்திச்சினை. அதோட மாப்பிள்ளை உள்ளுக்கு வந்தார் பாருங்கோ.

மாப்பிள்ளை வந்தபிறகு பொம்பிளை வரத்தானே வேணும். ஆனால் அவா வரேல்லை. அவாவுக்கென்ன பிரச்சனையாம் எண்டு கேட்டால், அவாவுக்கு முன்னால ஆடிக்கொண்டு வாறதுக்கு கொஞ்ச பிள்ளையளை ஒழுங்கு படுத்தினதாம். அதில ஒரு பிள்ளைக்கு வடிவா ஆடத் தெரியேல்லையாம். அதனால பக்கத்தில ஒரு அறைக்குள்ள வைச்சு நடனம் பழக்குகினமாம் எண்டு பொம்பிளையின்ர தாய் வந்து எனக்கு பக்கத்தில இருந்த குடும்பத்துக்கு பெரிய தொனியில சொன்னா பாருங்கோ.

அவா சொல்லிப்போட்டு போக, பக்கத்தில இருந்த ஒரு அம்மா; "இந்தக் கலியாணத்தை நம்பி காலமை சாப்பிடாமல் வந்தனான், இதுகள் பின்னேரமானாலும் சாப்பாடு தராதுகள் போல கிடக்கு" எண்டு புறுபுறுத்தா பாருங்கோ. கடைசியா ஏதோ ஆடிப்பாடி பொம்பிளையும் மேடைக்கு வந்திட்டா.

அவ வந்தாவோ வரேல்லையோ எண்டு பாக்காமல், ஐயர் அறக்கப்பறக்க மந்திரத்தை ஊதித்தள்ளுறார் பாருங்கோ. ஏனெண்டால் அவர் அடுத்த கலியாணத்துக்குப் போகவேணும் அல்லே. ஒரே நாளில இரண்டு கலியாணம், இரண்டு உழைப்பு அடிக்கடி கிடைக்குமே. அவரின்ர தேவை அவருக்குத் தானே தெரியும்.பிறகுதான் அமர்க்களம் பாருங்கோ. பொம்பிளை வந்து போய், பிறகு கூறை உடுத்தி வந்து மேடையில இருந்த பிறகு, தாலி கட்டுறதுக்கு ஐயர் மந்திரத்தை அவசர அவசரமா சொல்லி நெருங்குற கட்டத்தில, நிகழ்வைப் படம்பிடிக்குற தம்பியள் இரண்டு பேர், "ஐயா பொறுங்கோ ஐயா பொறுங்கோ" எண்டு கத்திச்சினை.

உதென்னடா புதுக்குழப்பம் எண்டு எல்லாரும் அந்தரப்பட்டு பாக்க, மேல பறந்து படம்பிடிக்குற கருவி (Drone) மேலேபோய் கூரையோட மோதி அடிப்பட்டு கீழவிழுந்து போச்சுதாம். அது திரும்ப பறக்கும் வரைக்கும் தாலி கட்டவேண்டாம் எண்டு கட்டளை போட்டிச்சினை. உடன மாப்பிள்ளையும் ஓம் ஓம் நாங்கள் பொறுக்கிறம், படம் தானே முக்கியம் எண்டார். ஓம் இப்ப எல்லாருக்கும் படம் காட்டுறதுதான் முக்கியம் எண்டார் எனக்கு பக்கத்தில இருந்த ஒருத்தர்.

அவரும் கலியாண வீட்டை நம்பி, காலியான வயிற்றோட வந்திருப்பார் போல இருக்குது கண்டியளோ. முன்னைய காலத்தில எல்லாம், எப்ப தாலி கட்டுறது



எண்டதை தீர்மானிக்கிறது பெற்றோரோ அல்லது மணமக்களோ தான் கண்டியளோ. ஆனால் இப்ப அதைத் தீர்மானிக்கிறது நிழற்படப் பிடிப்பாளர்கள் தான் பாருங்கோ. காலம் மாறிப் போச்சு எண்டு சொல்லக்கூடாது கண்டியளோ, காலம் நாசமாய்ப் போகுது எண்டுதான் சொல்லவேணும் பாருங்கோ

இந்தக் குழப்பத்துக்குள்ள வடையும் தேநீரும் வந்திச்சுது. இப்பவே இதைத் தாறது? இதை இப்ப சாப்பிட்டால் மத்தியானச் சாப்பாடு எப்ப சாப்பிடுறது எண்டு, முதல் புறுபுறுத்த அதே அம்மா திரும்பியும் புறுபுறுத்தா. வடையை இப்பதான் வருகுது எண்டால், சோறு எப்ப வரும் எண்டு நீங்களே கணக்குப் பண்ணுங்கோ எண்டுறதைத் தான் கலியாண வீட்டுக்காரர் மறைமுகமாச் சொல்லுகினம் எண்டு அந்த அம்மாவுக்கு நான் சொல்ல வெளிக்கிட, “கெட்டிமேளம் கெட்டிமேளம்” எண்டு அய்யர் சொல்லவும் சரியா இருந்துது பாருங்கோ.

அப்பாடா, ஒரு வழியா தாலி கட்டு முடிஞ்சுது. இனியென்ன சாப்பிட்டு வெளிக்கிடுறது தானே எண்டு நினைச்சன். அது நினைச்சது மட்டும்தான் நான் பாருங்கோ. சாப்பாடும் வந்து சாப்பிட்டும் முடிச்சு மாப்பிளை பொம்பிளை மேடைக்கு வந்த உடன மொய்யைத் திணிச்சுப்போட்டு ஓடுவம் எண்டு திட்டம் போட்டுட்டு நான் காத்திருந்தன் பாருங்கோ. ஆனால் மாப்பிளை பொம்பிளை வரேல்லை. சனம் எல்லாம் வெக்கையில கிடந்தது நெளியுது பாருங்கோ.

மண்டபத்துக்குள்ள இருக்கஏலாமல் சனம் வெளியில வந்து நிக்குது கண்டியளோ. நான்கு மணியாகியும் மாப்பிளை பொம்பிளை வரேல்லை எண்டா பாருங்கோவன். மாலைச் சிற்றுண்டி குடுக்கினமாம், உள்ளுக்கு போவம் வாங்கோ எண்டு நண்பர் என்னை இழுத்துக்கொண்டு உள்ளுக்குப் போட்டார் பாருங்கோ. அந்த வெக்கைக்குள்ள எங்க தேநீர் குடிக்கிறது. குளிர்களியை மட்டும் சாப்பிட்டுட்டு நான் மணமக்கள் வாற திசை நோக்கி பார்த்துக்கொண்டிருந்தன் கண்டியளோ.

நான் பொறுமையிழந்து; ஏன் மணமக்கள் வரப்பிந்துது எண்டு மாப்பிள்ளையின்ர தமையனிட்ட கேட்டன்



Opening hours : Mon-Sat 10.00am - 20.00pm
https//www.facebook.com/sari1fashionhouse

பாருங்கோ. அதுக்கு அவர் தந்த பதிலில எனக்கு உண்மையாவே தும்மல் தொடங்கியிட்டு கண்டியளோ. ஏனெண்டால் அதிர்ச்சியிலையும் எனக்குத் தும்மல் வாறது பாருங்கோ. விசயம் என்னவெண்டால் பாருங்கோ, பிற்பகலில நடக்க இருந்த திருமண வரவேற்பு நிகழ்வில மணமக்கள் வெட்ட இருந்த கட்டிகையை, மேடைக்கு மேல அந்தரத்தில தொங்க விட்டு, பிறகு கீழ இறக்க இருந்தவையாம். ஆனால் அண்டைக்கெண்டு அந்த பாரந்தூக்கி வேலைசெய்யேல்லையாம். அதைச் சரிசெய்து கொண்டிருக்கினமாம். சரிசெய்து முடிஞ்ச உடனே கட்டிகை கீழ இறங்கும் எண்டார் மாப்பிள்ளையின் தமையன்.

கட்டிகை இறங்குதோ இல்லையோ, நான் வீட்டை இறங்குறன் எண்டு சொல்லிப்போட்டு நான் வெளிக்கிட்டுட்டன் பாருங்கோ. அழைப்பு விடுத்து திருமணத்துக்கு வந்தவர்களை உபசரிக்குறது நேர்த்தியாக இருக்கவேணும் கண்டியளோ. அதுவும் குறித்த நேரத்துக்கு சில விடயங்களை நடாத்திய ஆகவேணும் பாருங்கோ. காலை சிற்றுண்டியை மத்தியானமும், மத்தியானச் சாப்பாட்டை பின்னேரமும் குடுக்கிறதை விட, இந்நிகழ்வுக்கு வருமுன் வீட்டிலேயே சாப்பிட்டுவிட்டு வரவும் எண்டு திருமண அழைப்பிதழில போட்டு விடலாம் பாருங்கோ.

வாறவன் எல்லாம் வேலைவெட்டி இல்லாமல், நாள் முழுக்க இருந்து திருமண நிகழ்வை வாய் பாக்கவேணும் எண்டுறது கட்டாயம் இல்ல கண்டியளோ. தாலி கட்டுதல், உணவு, வாழ்த்து எண்டுறதுதான் திருமணத்தில முக்கியமான விடயங்கள் கண்டியளோ. அதையே கோட்டை விட்டால் அது திருமணம் இல்லை. மறுநாள் தான் கேள்விப்பட்டன் பாருங்கோ, கட்டிகை கீழ இறங்க இரவு பதினோரு மணியாகிட்டுதாம்.

“வந்த நாள் முதல் இந்த நாள் வரை
வானம் மாறவில்லை
வான் மதியும் மீனும் கடல் காற்றும்
மலரும் மண்ணும் கொடியும் சோலையும்
நதியும் மாறவில்லை
மனிதன் மாறிவிட்டான்”

- அப்ப வரட்டே




யேர்மன் நாட்டில் ஆடைகளின் ராணி நவநாகரீகத்தில் மகாராணி

# Jasmine Silk House

2022ஆம் ஆண்டின்
புதிய டிசைன்களில்,
சாரி வகைகள், பஞ்சாபி வகைகள்,
சிறுவர்களுக்கான ஆடை வகைகள்
மற்றும்
அனைத்து கவறிங் நகைகளையும்
பெற்றுக் கொள்ளலாம்





**Fester Str.50, 40882 Ratingen**
**Tel : 021 028 447 44**
**Mob. : 0173 1937 325**

எமது நிறுவனம்  திங்கள் முதல் சனிக்கிழமை வரை
காலை 10.00 முதல் மாலை 8.00 வரை திறக்கப்படும்

த.பாவலன்



# புலிகளின் மீள் உருவாக்கமும் பூச்சாண்டியும்

வெறும் 23 வயதேயான அந்த இளைஞனைச் சந்திக்க அழைத்தார் நண்பர் கோமகன். முன்னாள் அரசியல் கைதியான அவர், தனது நண்பர்களது விடுதலைக்காகச் சமரசமின்றிப் போராடுபவர். சந்திக்க அழைத்த இளைஞன் சில தினங்களிற்கு முன்னரே மகசீன் சிறையிலிருந்து விடுவிக்கப் பட்டதாகத் தெரிவித்தார். பூநகரியைச் சேர்ந்த அவர் விடுதலைப் புலிகளை மீள் உருவாக்கி, கோத்தபாயவை ட்ரோன் விமான மூலம் கொலை செய்ய சதித்திட்டம் தீட்டியதாக கைதாகியவர்.

அவருடன் கைதான 23பேரில் அறுவர் தொடர்ந்தும் சிறையிலிருக்க, வருடக் கணக்கான கால இடைவெளியின் பின்னர் குற்றச்சாட்டுகள் இன்றி, நீதிமன்ற படியேறாது சத்தமின்றி விடுவிக்கப் பட்டுள்ளார். தந்தையினை இழந்த அவனுக்கு, கோழிக்கூடுக் கட்டித் தருவதாக வந்து சந்தித்த மற்றொருவரது கைத்தொலைபேசியினில் இவனது தொலைபேசி இலக்கமும் இருந்து தொலைத்ததைத் தவிர அவனுக்கு வேறு ஏதும் தெரிந்திருக்கவில்லை.




2009 போர் மௌனிக்கப்பட்ட போது பத்து வயதேயான தந்தையினை மாரடைப்பில் இழந்த அவனுக்கு, போராட்டம் பற்றிய அறிந்தவை காதுவெளி செய்தி மட்டுமே!. விடுதலையின் பின்னர் அடுத்து என்ன செய்வதென்ற கனவுகள் ஏதுமற்று, நட்டாற்றில் நிற்பதாக அவன் உணர்கின்றான். கல்வி கற்க பயன்பட்ட மடிக்கணணி கூட புலனாய்வுப் பிரிவால் பறிக்கப்பட்டு விட்டது. வீட்டினை சூழ உள்ள காணியில் விவசாயம் செய்ய முடிவு செய்துள்ளதாகவும் அவன் கூறுகின்றான்.

சிங்கள மக்கள் மத்தியில் சரிந்து வரும் தமது செல்வாக்கை சரி செய்யவும், புலிகளின் மீள் உருவாக்கம் அல்லது புலிகள் உயிர்ப்புடன் இருக்கிறார்கள் என தேசிய, மற்றும் சர்வதேச அளவில் ஒரு செய்தியை வழங்க வேண்டிய தேவை தொடர்ந்து வந்த சிங்கள அரசுகளுக்கு அவசியமாய் இருந்தே வருகின்றது. இதன் காரணமாக திட்டமிட்ட வகையில் புலிகளின் மீள் உருவாக்கம் என்ற போர்வையில் தமிழர்கள் மீதான கைது வேட்டை தொடர்கின்றது.

இலக்காக யுத்தம் இடம் பெற்ற போது, தமது உறவுகளைப் பறி கொடுத்தவர்கள், புலிகள் அமைப்பில் இருந்து உயிர் நீத்தவர்களது உறவுகள், அவர்களை நினைவுக் கூர்ந்தவர்கள், தலைவரின் பிறந்த நாளைக் கொண்டாடியவர்கள். மற்றும் தலைவரின் புகைப்படத்தை முகப் புத்தகத்தில் பதிவிட்டவர்கள், பகிந்தவர்கள், புலிகளின் பாடல்களை இசைத்தவர்கள், கேட்டவர்கள் என அனைவரும் முதலில் புலிகளாக அடையாளம் காணப்பட்டு, புலிகளை மீள ஒருங்கிணைத்தார்கள் என்றும் குற்றம் சாட்டி கைது செய்யப்பட்டு, சிறை வைக்கப் படுகிறார்கள் என்கிறார் சிறையில் உள்ள அரசியல் கைதியான சுலக்சன்.

வட கிழக்கில் உள்ள தமிழ் இளைஞர்கள் மற்றும் பதின்ம வயதுடையவர்களை இலக்கு வைத்து, அவர்களின் வறுமை மற்றும் இன உணர்வினைத் தூண்டி, இந்தப் புலிகள் மீள் உருவாக்க வலைக்குள் சிக்க வைக்கப்பட்டு, பின்னர் இவர்களைக் கைது செய்து சிறைவைக்கப் பட்டுள்ளார்கள். இவர்களில் பலர் யுத்தம் இடம் பெற்ற காலங்களில் சிறுவர்களாக இருந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

யுத்தத்தின் இறுதி நாட்களில் புலிகள் அமைப்பில் இருந்ததாக கூறப்படும் சிலர், பின்னர் இராணுவ புலனாய்வாளர்களுடன் சேர்ந்து, முன்னாள் போராளிகளைக் கைது செய்வதற்கும், வேறு பல உதவிகளையும் வழங்கி வந்ததாகக் கூறப்படுகிறது. இது தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் மேற்படி செயற்பாட்டுடன் இவர்களுக்கும் தொடர்புள்ளதாகக் கூறப்பட்டாலும், அவர்கள் கைது செய்யப்படுவது தவிர்க்கப்பட்டு வருகிறதெனவும் சுலக்சன் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டு சிறையில் இரண்டு வருடங்களுக்கு மேலாக சிறையிலுள்ள மருத்துவர் சிவரூபன் இத்தகையவர்களுள் ஒருவர். முன்னாள் போராளியென உதவ போய், அகப்பட்ட அவரது கதை தனித்துவமானது. மேலும் சிலர் புலம்பெயர் நாடுகளில் இருந்து கொண்டு, புலனாய்வு பிரிவின் செயற்பாடுகளுடன் தொடர்பு பட்டிருப்பதும் தெரிய வருகின்றது. இந்நிலையில் தமிழர் தாயகத்தில் ஒரு தமிழர் ஏதாவது ஆயுதத்துடன் பிடிபட்டால், அதாவது வேட்டை துப்பாக்கி ஆயினும் சரி, அவர் மீது உடனடியாக பயங்கரவாத தடைச்சட்டம் பாய்ச்சப்பட்டு, அவர் புலியாக மாற்றப்படுவார்.

அதே போன்று இயக்கச்சியில் வெடிவிபத்தில் உயிரிழந்த முன்னாள் போராளியின் கை தொலைபேசியிலிருந்த இலக்கங்களை வைத்து, வேட்டையாடப் பட்ட பலரும் வருடக்கணக்கில் சிறைகளிலுள்ளனர். ஆனால் இலங்கையின் வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய பாகங்களில் வெளிநாட்டு தயாரிப்பு அதி நவீன ஆயுதங்களுடன் யாராவது கைது செய்யப்பட்டால், அவர்களுகெதிராக சாதாரண குற்றவியல் சட்டம் நடைமுறைப் படுத்தப்படும். பாதுகாப்பு தரப்பினரைப் பொறுத்தவரை ஒரு தமிழ் சிறுவனோ, சிறுமியோ பட்டாசு வெடித்தால் கூட, அவர் புலி என அடையாளப்படுத்தப்படும் நிலையே காணப்படுகிறது. இயக்கச்சியில் முன்னாள் போராளி தயாரித்த பன்றி வேட்டைக்கான



வெடியும் கோத்தாவை கொல்லும் குண்டாகியிருக்கின்றது.

இவ்வாறு கைது செய்யப்படும் தமிழ் இளைஞர் யுவதிகளை இலங்கைக்கு எதிராக சர்வதேச ரீதியாக நெருக்கடிகள், அழுத்தங்கள் ஏற்படும் போது, அரசு தாம் தமிழர்களின் விடயத்தில் கரிசனைக் காட்டுவதாகக் காண்பிப்பதற்குப் புலிகளின் மீள் உருவாக்கம் என்ற போர்வையில் கைது செய்யப் பட்டுள்ளவர்களை விடுதலை அல்லது பிணை வழங்கி விடுவித்து விட்டு, தாம் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் நீண்டகாலமாக உள்ள கைதிகளை விடுதலை செய்தது போன்றதான விம்பத்தைத் தொடர்ச்சியாக ஏற்படுத்தவும் இன்னொரு புறம் முயல்வது பரிதாபகரமானது.

இதனை அரசியல் கைதிகளை விடுதலை செய்வதாக சில தமிழ் அமைப்புக்களும், அதைச் சார்ந்தவர்களும், சில ஊடகங்களும் செய்திகளை வெளியிடுவதானது அது உண்மையாக அரசியல் கைதிகளாக மிக நீண்ட காலமாக உள்ளவர்களுக்கான நீதி மறைக்கப் படுவதோடு, மறுக்கப்படவும் காரணமாக அமைகின்றதென்ற கவலை, நீண்ட நாட்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளது கவலையாக உள்ளதென்கிறார் மற்றொரு தண்டனை தமிழ் அரசியல் கைதியான சதீஸ்.

மீளுருவாக்கம் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் சிறைப்பட்டிருக்கும் அப்பாவி தமிழ் இளைஞர்களின் விடுதலையை வலியுறுத்த, தமிழ் அரசியல் தலைவர்கள் பின்னடித்தே வருகின்றனர். அவர்கள் கைது செய்யப்பட்டமையே தவறு. அவர்களில் பலருக்கு வழக்கு தாக்கல் கூட செய்ய முடியாது. அவர்களைக் கைது செய்து, சிறை வைக்கப்பட்டுள்ளமையானது தமிழ் மக்கள் மீதான தொடரும் ஒரு அடக்குமுறையின் வடிவமே ஆகும். மற்றொரு வகையில் இன்னொரு இன அழிப்பின் அம்சமாகவும் இருந்து வருகின்றது.

தற்போதைய ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ அவர்கள் தனது தேர்தல் வாக்குறுதிகளாக குற்றச் சாட்டுக்குள்ளாகின்ற இராணுவ மற்றும் புலி உறுப்பினர்களுக்கு புனர் வாழ்வளித்து விடுதலை செய்வதாகக் கூறியிருந்தார். ஆனாலும், அவ்வாறான செயற்பாடு இடம்பெறவில்லை.

பின்னர் தனது விசேட பொதுமன்னிப்பு ஊடாக *16* தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்திருந்தார். பின்னர் நாட்டில் ஏற்பட்ட கொரோனா தாக்கம் மற்றும் அரசியல் நிலைமைகளால் தமிழ் அரசியல் கைதிகளின் விவகாரம் கிடப்பில் போடப்பட்டுள்ளது. இதுவரை காலமும் தமது சுய லாப அரசியலுக்கு அப்பால் சென்று நல்லிணக்க முயற்சியாக இந்தச் சிறைகளில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும்.

ஆனால், இலங்கை அரசு கைது செய்து தடுத்து வைத்துள்ள மீள் உருவாக்க அப்பாவிகளது விடுதலையை அரசியல் கைதிகளது விடுதலையாகக் காண்பித்து வருகின்றது. அதனையும் புலம்பெயர் தமிழ் ஊடகங்கள் என்ன ஏதுவென புரியாது பிரச்சாரப்படுத்துவது அதனை விட வேதனையானது.




Original Srilankisches & Indisches Restaurant

# Sweet Chilli




100% Halal
100% Frisch
100% Naturgewürze
100% Naturkräuter

புதிய முகவரியில்
150 ஆசனங்களுக்கும் மேல்





Rheinische Str. 78
44137 Dortmund

Tel : 0231 315 46 84
www.sweetchilli-do.de

By. Hanafi Nana

பூமிபுத்திரன்

# என்று முடிவுக்கு வரும் உக்ரைன் போர்



உக்ரைன் போர் 125 நாட்களைக் கடந்தும் தொடர்கிறது. இந்தப் போர் கிட்டிய எதிர்காலத்தில் முடிவுக்கு வரும் அறிகுறிகள் எதுவுமே தென்படவில்லை. போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான சாத்தியங்கள் நாளுக்கு நாள் அருகி வருவதையே காண முடிகின்றது. போரில் ஈடுபட்டுள்ள ரஸ்யா, பொருளாதார அடிப்படையில் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள போதிலும், அவற்றை ஏதோ ஒருவகையில் சமாளித்துப் போரைத் தொடர்ந்து வருகின்றது. ‘சிறப்பு நடவடிக்கை’ என்ற பெயரிலான படை நடவடிக்கையில் குறிப்பிடத்தக்க வெற்றிகளையும் பெற்று வருகின்றது.

மறுபுறம், உக்ரைன் மிகுந்த நெருக்கடியைச் சந்தித்து வருகின்றதைப் பார்க்க முடிகின்றது. தினமும் 50 முதல் 100 வரையான படையினர் தமது தரப்பில் கொல்லப்பட்டு வருவதாகவும், 500 பேர் வரையானோர் காயங்களுக்கு இலக்காகி வருவதாகவும் அரசாங்கத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவை உண்மையான தகவல்களா? அல்லது மேலை நாட்டிடம் இருந்து அளவுக்கு அதிகமான படைக் கருவிகளையும், நிதியையும் பெற்றுக் கொள்வதற்கான செலன்ஸ்கி அரசின் தந்திரமா? என்பது அவர்களுக்கே வெளிச்சம். என்றாலும், இதுவரை ஏறக்குறைய 5,000 வரையான பொதுமக்களே போரில் கொல்லப்பட்டிருக்கின்றார்கள் என்பது வருத்தமான செய்தியாக உள்ளது. இதுவே அமெரிக்கா முன்னெடுத்த ஒரு படை நடவடிக்கையாக இருந்திருந்தால், பொதுமக்களின் பலி எண்ணிக்கை நூறு நாட்களில் இலட்சத்தைத் தொட்டிருக்கும் என்பது கடந்தகால அனுபவம்.

ஐ.நா. சபையின் தகவல்களின் பிரகாரம் தற்போதுவரை 10 இலட்சத்துக்கும் அதிகமான உக்ரைன் மக்கள் அகதிகளாக உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் இடம்பெயர்ந்து உள்ளார்கள். 125 நாள் போரில் இவ்வளவு எண்ணிக்கையான மக்கள் இடம்பெயர்வது என்பது மிகப் பாரிய எண்ணிக்கையே!. பெண்களும், சிறார்களும், முதியவர்களுமே இவ்வாறு இடம்பெயர்ந்து வருகின்றார்கள். 17 முதல் 60 வயது வரையான ஆண்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு உக்ரைன் அரசாங்கம் தடைவித்து உள்ளமை தெரிந்ததே!. அவர்கள்

ஏதோவொரு விதத்தில் இராணுவப் பணிகளில் ஈடுபடுத்தப்படுகின்றார்கள்.

உக்ரைன் அகதிகளை ஆரம்பத்தில் இருகரம் நீட்டி வரவேற்ற ஐரோப்பிய நாடுகள், படிப்படியாகத் தங்களின் போக்குகளை மாற்றிக் கொண்டு வருகின்றன. குறுகிய காலத்தில் முடிந்துவிடும் என எதிர்பார்க்கப்பட்ட போர், மாதக் கணக்கில் நீடிக்கின்ற நிலையில் ஐரோப்பிய அரசாங்கங்கள் தங்களின் நலத்திட்ட நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. அதேவேளை, பல நாடுகளிலும் உக்ரைன் அகதிகள் துஸ்பிரயோகங்களுக்கு ஆளாகி வருவதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. குறிப்பாக, பெண்கள் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களை எதிர்கொள்வதாகச் செய்திகள் வெளியாகி உள்ளன.

உக்ரைன் போரின் பக்க விளைவாக உலக நாடுகளில் எரிபொருளின் விலை அதிகரித்து உள்ளது. அதேவேளை, உணவுப் பொருட்களுக்கானத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. உலகளாவிய இந்தப் பிரச்சனையை உலக நாடுகள் அனைத்தும் இணைந்து எதிர்கொள்வதற்குப் பதிலாக, இந்தப் பிரச்சனைக்கு வித்திட்டது ரஸ்யாவே எனக் குற்றம் சாட்டுவதிலும், இதனை முன்வைத்து ரஸ்யாவைத் தனிமைப்படுத்துவதிலும் மேற்குலகு குறியாக இருந்து செயற்பட்டு வருகின்றது. ‘பொருளாதாரத் தடை’ என்ற முனை மழுங்கிய ஆயுதத்தை நம்பிச் செயற்படும்



மேற்குலகம், பேச்சுவார்த்தை மூலம் பிரச்சனைக்குத் தீர்வு காணுதல் என்ற அணுகுமுறையை நினைத்துப் பார்க்கக் கூடத் தயாராக இல்லை.

மக்களை மூளைச் சலவை செய்வதில் வல்லவையான மேற்குலக ஊடகங்கள், உக்ரைன் போரில் உக்ரைன் படைகள் வெற்றியீட்டி வருவதாக அன்றாடம் செய்திகளை வழங்கி வருகின்றன. மேற்குலகம் வழங்கும் ஆதரவின் காரணமாகவே இந்த வெற்றிச் சாத்தியமாகின்றதாக அவை திரும்பத் திரும்பச் சொல்வதன் மூலம், விலைவாசி



உயர்வின் காரணமாக உருவாகியுள்ள மக்களின் அதிருப்தி தத்தம் நாட்டு அரசாங்கங்களை நோக்கித் திரும்புவதைத் தடுத்துவிடலாம் என மனப்பால் குடிக்கின்றன. என்றாலும், ஆங்காங்கே சலசலப்புகள் உருவாகத் தொடங்கி விட்டன என்பதை மாற்று ஊடகங்களும், சமூக ஊடகங்களும் வெளிச்சத்துக்குக் கொண்டுவரத் தொடங்கியுள்ளன.

உக்ரைனில் நடைபெற்றுவரும் போரை ரஸ்யாவுக்கும், உக்ரைனுக்குமான போர் எனக் காட்சிப்படுத்த மேற்குலகம் முயன்று வந்தாலும், உண்மையில் அது ரஸ்யாவுக்கும் மேற்குலகுக்குமான போரே என்பதை மறைக்க முடியாமல் உள்ளது. ரஸ்யாவைப் பொறுத்தவரை தற்போதுவரை போருக்கு வெளிப்படையான ஆதரவை அயல்நாடான பெலாரஸ் மாத்திரமே வழங்கி வருகின்றது. ஆனால், உக்ரைன் தரப்பில் உலக வல்லரசுகளான அமெரிக்கா, பிரான்ஸ், யேர்மனி, பிரித்தானியா உள்ளிட்ட 50 வரையான நாடுகள் உள்ளன. இவை நிதி, போர்த் தளபாடங்கள், பயிற்சிகள் என்பவற்றைத் தங்குதடையின்றி வழங்கி வருகின்றன. இவை எதனையும் அவை பொதுவெளியில் மறைப்பதும் இல்லை.

அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சின் தகவல்களின் பிரகாரம், யேர்மன் நாட்டில் வைத்து உக்ரைன் படையினருக்குப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. யூன் 15ஆம் திகதி வெளியிடப்பட்ட தகவல்களின் பிரகாரம், எம்777 ஹொவிற்சர் ரக ஏவுகணைகள் தொடர்பில் 420 பேரும், எம்109 தானியங்கி ஏவுகணைத் தொடர்பில் 300 பேரும், எம்113 துரப்புக் காவி வாகனங்கள் தொடர்பில் 129 பேரும், ஆளில்லா வானவூர்திகள் தொடர்பில் 100 பேரும், துரித ஏவுகணைகளைக் கையாளுதல் தொடர்பில் 60 பேரும் பயிற்சியை நிறைவு செய்துள்ளனர். இதேபோன்று பிரித்தானியாவும் உக்ரைன் படையினருக்குப் பயிற்சிகளை வழங்குவது தொடர்பில் அண்மையில் அறிவிப்பு வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.




போர்க் களத்தில் ரஸ்யா மெதுமெதுவாக நிலப்பரப்புகளைக் கைப்பற்றி வருகின்றமையைப் பார்க்க முடிகின்றது. இழந்த நிலப்பரப்புக்களை மீளக் கைப்பற்றியே தீருவோம் என உக்ரைன் சூழுரைத்து வருகின்ற போதிலும், தற்போதைய கள நிலவரங்களின் பிரகாரம் அது சாத்தியமில்லை எனவே தெரிகின்றது.

உக்ரைன் விவகாரத்துக்குப் பேச்சு வார்த்தை மூலமே தீர்வு சாத்தியம் என உக்ரைனுக்கு ஆதரவு வழங்கும் மேற்குலகம் திரும்பத் திரும்பக் கூறி வந்தாலும், அது வெறும் உதட்டளவிலான வார்த்தையே என்றவாறாகவே புரிந்துகொள்ள முடிகின்றது. அது மாத்திரமன்றி, உக்ரைன் போர் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில், உக்ரைனை மீள் நிர்மாணம் செய்வதற்கான உதவி வழங்குவது தொடர்பில் மாநாடு நடைபெறுகின்றது. போரே முடிவுக்கு வந்திராத நிலையில், மீள் நிர்மாணம் எவ்வாறு சாத்தியமாகும்? எதற்காக, யாரை ஏமாற்ற இந்த மாநாடு எனப் புரியவில்லை.

தனது நாட்டின் பாதுகாப்பு என்ற அடிப்படையில், விட்டுக் கொடுப்புக்கு இடமே இல்லை என்பது ரஸ்யாவின் நிலைப்பாடு. புலிவாலைப் பிடித்த கதையின் நிலையில் உள்ள உக்ரைன், மேற்குலகின் ஆதரவு இருக்கும் வரை போரில் வெல்ல முடியும் என்ற அதீத நம்பிக்கையுடன் இருப்பதைப் பார்க்க முடிகின்றது. ரஸ்யாவை எத்துணை தூரம் சகல வழிகளிலும் பலவீனப்படுத்த முடியுமோ, அத்துணை தூரம் பலவீனப்படுத்துவது என்பது மேற்குலகின் இலக்கு. முடிந்தால் ரஸ்யாவில் ஒரு ஆட்சி மாற்றத்தை உருவாக்கி, அந்த நாட்டின் வளங்களைக் கொள்ளையிடும் கனவு மேற்குலகிடம் உள்ளது. இந்தப் போட்டா போட்டியில் படைகளின் உயிர்களைப் பற்றியோ, மக்களின் துயரம் பற்றியோ சிந்திப்பது யார்? விடை தெரியாத கேள்வி.






இலட்சுமணன்

# அதிகாரப் பசிக்குப் பலியாகப் போகும் புலம்பெயர் மக்கள்

“நீங்கள் வீட்டுக்குப் போங்கள்” என்று ராஜபக்ச ஆட்சியைப் பார்த்து மக்கள் சொல்லியாயிற்று. அப்படியிருக்க நாட்டில் நடைபெற்று வரும் நடவடிக்கைகள், அவர்கள் ஒரே நாடு, ஒரே சட்டத்தைக் கேட்டார்களா? என்று எண்ணத் தோன்றுகிறது. இலங்கையைப் பொறுத்த வரையில் ஒன்றைத் தொடங்குவதும், கிடப்பில் போடுவதும் புதிதல்ல. ஆனாலும், இந்தச் செயலணி ஆரம்பிக்கப்பட்டது முதல், எதிர்ப்புகள் வந்த வண்ணமே இருந்தன. இருந்தாலும் அச் செயலணி கால நீடிப்புகள் வழங்கப்பட்டு, செயற்பட்டு தன்னுடைய அறிக்கையை ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சவிடம் கையளித்திருக்கிறது.

ஒரு தனி மனிதனுடைய அதிகார ஆசைக்காக, நாட்டு மக்கள் பலியாகிப் போவதை ஏற்றுக் கொள்ள முடியாவிட்டாலும், அவர் தன்னுடைய பதவிக் காலம் முடியாமல் வீடு செல்லமாட்டேனென்று திட்டவட்டமாகச் சொல்லிவிட்டார் கோத்தபாய. அதனை மக்கள் மறுதலித்துக் கொண்டிருந்தாலும், பயன் ஏதுமில்லை. ஆனால், நாடு வறுமைக்குப் பெயர் போனதாகச் சொல்லும் சோமாலியாவாக மாறிவிடும் முன், அவரது வீடு செல்லல் நடைபெறும் என்று எல்லோரும் நம்புவோம். இருந்தாலும், அதிகாரப் பசி என்பது எவ்வளவுக்குக் கொடூரமானது? என்பதற்கு உதாரணமாக, உலக வரலாற்றில் கோத்தபாய ராஜபக்ச பதிவு செய்யப்பட்டு விட்டார்.

பிழையான அரசியல் முன்னெடுப்புகள், உச்சகட்ட அதிகார துஸ்பிரயோகம், இனவாத நடவடிக்கைகள், அடக்கு முறைகள் இவைகள்தான் இலங்கையின் நற்குணங்கள். இந்த நற்குணங்களை மாற்றியமைப்பது சற்றுச் சிரமமே!. இன்றைய சூழ்நிலையில் விலைவாசி உயர்வினால் பல்லாயிரக் கணக்கான மக்கள் வறுமையில் வாடுகிறார்கள். உணவின்றித் தவிக்கிறார்கள். இதற்குக் காரணம் இனவாதிகளும், பொறுப்பற்ற இந்த ஆட்சியாளர்களுமே

என்பதனை, எல்லோரும் உணர்ந்து விட்டாலும் பயனில்லை.

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு, சமையல் எரிவாயு இன்மை, விலைவாசி உயர்வு என்று சென்று கொண்டிருக்கையில், பொருள்கள் இல்லா நிலையொன்றே உருவாகி விடுமோ என்ற அச்சம் மக்கள் மத்தியில் பெரும் பீதியாக மாறியிருக்கிறது. மிக மோசமான பொருளாதார நெருக்கடியால் மக்கள் பாதிக்கப்பட்டு, இன்னல் படுவதிலிருந்து மீட்சியை யார் கொடுப்பார்கள்? என்ற ஏக்கம் இப்போது ஏற்பட்டுவிட்டது.


இரா.சாணக்கியா

இந்த இடத்தில்தான், இலங்கையின் நெருக்கடியான பொருளாதாரச் சிக்கல் விவகாரத்துக்குள் அண்மைக் காலமாக புலம்பெயர் உறவுகளின் முதலீடுகளைப் பற்றிய பேச்சுகள் அதிகரித்து வருகின்றன. இந்தப் பேச்சுகள் உண்மையானவைதான், அத்துடன் தேவையானவையும் கூட. ஆனால், புலம்பெயர் உறவுகள் முதலீடுகளை மேற்கொள்வதாயின் அவர்களுக்கும், அவர்கள் முதலிடும் பணத்திற்கும் பாதுகாப்பு எங்கிருந்து கிடைக்கும்? என்ற கேள்விதான் அதற்குள் நெருடலாக இருக்கிறது.

இந்த இடத்தில் அண்மையில் ஐரோப்பியப் பயணம் மேற்கொண்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியா நோர்வேயிலுள்ள தமிழர்களைச் சந்தித்துப் பேசியபோது கூறியது..,

“இலங்கையர்களின் வாழ்க்கை தரத்தினை தமிழ் தேசிய கூட்டமைப்பினால் மேம்படுத்த முடியும். ஊழல் மோசடி, இலஞ்சம் ஆகியவை தற்போதைய நிலைமைக்குக் காரணம் என்று மட்டும் சொல்லமுடியாது. இது 1948இல் இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்தது முதல் தொடங்கி விட்டது என்ற கருத்து, தற்போது பேச்சுப் பொருளாக மாறியிருக்கிறது.

நாட்டில் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு வழங்க வேண்டும் என்பதில் இன்னமும் அரசாங்கத்திற்கு தீர்மானமில்லை. தற்போதையப் பிரச்சினைக்குப் பிரதான காரணியாக உள்ள இனப்பிரச்சனையைத் தீர்த்து விட்டால், நாட்டின் பெரும்பாலானப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைத்துவிடும் என்பது, இன்னும் பலருடையக் கருத்தாக இருக்கிறது. சிங்கள இளைஞர்கள் தமிழ் மக்களின் முள்ளிவாய்க்கால் நினைவைக் கூட கோட்டா கோ கமவில் நடத்தி முடித்துவிட்டார்கள்.

ஆனாலும், அரச இயந்திரம், அதனை இயக்குகின்ற ஏனைய தரப்புகாக இருக்கின்ற சிங்களப் பேரினவாதம் இன்னமும் தமிழர்கள் விடயத்தில், எந்த ஒரு சாதகமான சமிக்ஞைகளையும் வெளிப்படுத்தியதாகத் தெரியவில்லை. மாறாக இருக்கின்ற மாகாண சபை அதிகாரங்களைக்கூட இல்லாமல் செய்வதற்கான திரைமறைவு வேலைகள் நடைபெறுவதாகவே தெரிகிறது.

இவ்வாறான நிலைதான் இலங்கையின் பொருளாதார நெருக்கடியால், ராஜபக்ச குடும்பத்தினரின் ஆட்சி மீது மக்களை வெறுப்புக் கொள்ள வைத்தது. அதனால், உருவான ‘கோ ஹோம் கோட்டா’, ‘மைனா கோ கம’ போன்றவைகள் நாட்டின் நெருக்கடிகளாகவே மாற்றம் பெற்றன. இந்த நெருக்கடிகள் தீர்க்கப்படாமலேயே ஆட்சிமாற்றத்துக்கு ஒப்பான பதவி விலகல்களும், பதவி ஏற்புகளும் நடைபெற்றன. இவற்றினாலும் இன்னமும் மீட்சி கிடைக்கவில்லை என்பதற்கு அப்பால், தற்காலிகமான பரிகாரங்கள் கூடக்



கிடைக்கவில்லை. இருந்தச் சிக்கலும், நெருக்கடியும் மேலும் வலுப்பெற்றேயிருக்கிறது.

இலங்கையில் தமிழர்களுக்கு அவர்களின் உரிமைகள் மறுக்கப்பட்ட காரணத்தினால் எதிர்ப்புப் போராட்டங்கள் உருவாக்கி, ஆயுதப் பேராட்டமாக வலுப்பெற்றது. அதனால், 30 வருடங்களுக்கும் மேலான சிவில் யுத்தம் ஒன்றை நாட்டில் நடத்த வேண்டிய நிலை உருவனது. ஒரு நாடு, மற்றுமொரு நாட்டுக்கு எதிராக நடத்துகின்ற யுத்தத்துக்கு நிகரான ஒன்று இலங்கையில் நடைபெற்று முடிந்தது. அந்த யுத்தத்தில் உலகின் பெரும்பாலான நாடுகள் பங்கு கொடுத்திருந்தன. ஆனால், அந்த நாடுகள் தமிழர்களுக்கெதிராகவே செயற்பட்டிருந்தனர் என்பதனை இப்போது மறுக்கவே தலைப்படுகின்றன.

யுத்தத்திற்காகக் கடன் பெற்று, அதிக நிதி செலவிடப்பட்டது. 2009ஆம் ஆண்டு காலத்திற்குப் பிறகு பாதுகாப்பு அமைச்சுக்கு அதிக நிதி செலவிடப் பட்டது, இப்போதும் செலவிடப்படுகிறது. அது உண்மையில் நாட்டின் பாதுகாப்பினைப் பலப்படுத்தும் செயற்பாடே. இந்தச் செயற்பாட்டினால் சாதாரண மக்களின் மீதான அரசின் கரிசனை குறைந்தே வந்தது. இருந்தாலும் நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைக்கு மூலகாரணம் என்ன என்பதனை உணராதவர்களாக இருந்து வருவது எதற்காக? என்பதுதான் கேள்வி.

இவ்வாறிருக்கையில் நாட்டில் 73 வருடகால தீர்க்கப்படாத தமிழர்களின் உரிமை சார்ந்த பிரச்சினைகளினாலும், அவற்றினால் ஏற்பட்ட இன்னல்களினாலும் நாட்டை விட்டுச் சென்று புலம்பெயர் தேசங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழர்கள், இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு உதவ வேண்டும் என்கின்ற பார்வை, பேச்சுக்கள், கருத்துப் பகிர்வுகள், கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன. ஆனால், தமிழர்களின் நிலைப்பாடானது தமிழர்களின் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கினால், உலகளாவிய ரீதியில் உள்ள 13 இலட்சம் புலம்பெயர் தமிழர்கள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வார்கள் என்பதாகவே இருக்கிறது. ஜனாதிபதி, பிரதமர் பதவி விலக வேண்டும் என்ற பெரும்பான்மைச் சிங்கள மக்களின் கோரிக்கை வலுவடைந்து வருகின்ற நிலையில், 'ஜனாதிபதி பதவி விலகாவிட்டாலும் பரவாயில்லை, தீர்வை வழங்குங்கள்' என்று தமிழர்கள் கோருவது நியாயமானதாகவே இருக்கிறது. இது காலத்தின் கட்டாயமும் கூட.

இலங்கையின் தற்போதைய நிலைமை கவலைக்குரியதாகவே மாறிவருகிறது. போக்குவரத்துக்கான எரிபொருளே தேவையான அளவில் இல்லா விட்டாலும், ஓரளவுக்கேனும் வழங்குவதற்கு முடியாததாகி விட்ட அரசாங்கம், வருங்காலங்களில் வறுமைக்கும், பட்டினிச் சாவுகளுக்கும்



எவ்வாறு தீர்வு வழங்கவுள்ளது? என்பதுதான் இப்போதைய சந்தேகம். இந்த நிலையில்தான் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு மக்களின் அபாயகரமான நிலை தொடர்பில் அக்கறையில்லை என்ற கருத்தும் வெளிவருகிறது. மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த வேண்டிய ஜனாதிபதியும், அரசாங்கமும் கைவிரித்த நிலையில்தான் இருக்கிறது.

புலம்பெயர் தமிழர்களைப் பொறுத்த வரையில் வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்களையேனும் அவர்கள் காப்பாற்றியாக வேண்டும். ஆனால், அதனைக்கூட அவர்களால் சரியான முறையில் மேற்கொள்ள முடியாத நிலைமையே காணப்படுகிறது. கடந்த காலங்களில் யுத்தத்தின் கடுமையினால் பாதிப்புற்ற, அதனை எதிர்கொண்ட வடக்கு, கிழக்கு மக்கள் இப்போது மிக இறுக்கமான நெருக்கடியை எதிர்கொள்கிறார்கள்.

தற்போதைய நிலையில், அதிகாரிகளும் பொது மக்களும், பொலிஸாரும், இராணுவத்தினரும் ஒருவருக்கொருவர் முரண்பட்டுக் கொள்கின்ற நிலைமையே காணப்படுகிறது. அதற்குக் கடந்த மாதத்தில் அறிவிக்கப் பட்ட அத்தியாவசியத் துறைகளுக்கு மாத்திரம் என்ற அறிவிப்பும் காரணமாகும். நாடு ஆதிகாலச் சூழலுக்குச் சென்று கொண்டிருக்கின்றது. துவிச்சக்கரவண்டியும், மாட்டுவண்டியும் கால்நடையும்தான் இப்போது நாட்டு மக்களின் போக்குவரத்தாக மாறிவிட்டது. இது இலங்கை அரசாங்கம், இலங்கை மக்களுக்கு கொடுத்திருக்கும் எந்த வகையான பரிசு என்பது தெரியவில்லை.

நாடு என்ற ரீதியில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியை எவ்வாறு முகம் கொடுப்பது? இதிலிருந்து எவ்வாறு வெளியேறுவது? எதிர்காலம் நோக்கி எப்படி முன்னேறி செல்வது? என்பவைகள் பற்றிச் சிந்திப்பதனை விடவும், நாட்டில் இப்போதும் தமிழர்களின் நிலங்களை எவ்வாறு அபகரிப்பது? ஆதிக்கத்துக்குள்ளாக்குவது? பௌத்தத்தின் ஆதிக்கத்தினை எவ்வாறு வலுப்படுத்துவது? என்பவைகள் குறித்தே அரச இயந்திரமும், சிங்களப் பேரினவாதச் சக்திகளும் சிந்தித்துக் கொண்டிருக்கிறன.

அதற்கு இராணுவமும், பாதுகாப்புத் தரப்பும் முழு ஆதரவையும் பாதுகாப்பையும் வழங்கி வருகிறது. கிழக்கில் யுத்தம் நடைபெற்ற வேளைகளிலும், அதற்குப் பின்னரும் தாராளமாக அவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில், வடக்கில் மேலும் மேலும் இப்போது அதிகளவில் முன்னெடுக்கப்பட்டு



வருகிறது. இவ்வாறான விசேடமான முன்னெடுப்புக்கள் இப்போதைய பொருளாதார நெருக்கடிக்குள்ளும் நடைபெறுகையில் நாம் இவர்களிடமிருந்து எவ்வாறு தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வை எதிர்பார்ப்பது? என்பதும் இருக்கிறது.

இவ்வாறிருக்கையில், யுத்த காலத்திலும், அதற்கு பின்னரான காலப்பகுதியிலும் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்குக் கூட பொறுப்புக் கூற மறுக்கின்ற இலங்கை அரசாங்கத்திடம், தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் கொடுங்கள் என்று கேட்க முனைவது பொருத்தமானது தானா? என்றும் எண்ணத் தோன்றுகிறது. இவ்வாறான நிலையில், எமது புலம்பெயர் உறவுகள் இங்கு முதலீடுகளை மேற்கொள்வதற்கு முன்வருவார்களாயின் அவர்களுக்கு இங்கு சரியான பாதுகாப்பு வேண்டும். அதற்கும் மேலாக அவர்கள் முதலிடும் பணத்திற்கு இங்கு பாதுகாப்பு வேண்டும். இந்த இடத்தில்தான், அந்தவிதமான பாதுகாப்பு நிலைமை இங்கு உருவாக்கப்பட வேண்டும். மாகாண சபைகளுக்கான நிதி அதிகாரங்களே அதற்கான ஒரே வழி என்கின்ற கருத்துகளும் முன்வைக்கப் படுகின்றன.

தனி ஈழத்துக்கான கோரிக்கையுடன் ஆரம்பிக்கப்பட்ட தமிழர்களுடைய போராட்டம், இந்திய அரசாங்கத்தின் இணைவுடன் உருவான இந்திய - இலங்கை ஒப்பந்தம், 13ஆவது திருத்தச் சட்டமும் இலங்கைக்குக் கொண்டுவந்த மாகாண சபைகளுக்கான அதிகாரத்துக்குள் மட்டுப்படுத்தப்பட்டன. வடக்குக் கிழக்கு இணைப்புடனான அந்த அதிகாரம் கூடச் சரியாக வழங்கப்பட்டிருக்கவில்லை. அதனால்தான் விடுதலைப் புலிகள் அம்முறையினை எதிர்த்தார்கள், ஏற்க மறுத்திருந்தார்கள். ஆனால், அதனை ஏற்று, பின்னர் தமிழீழ அறிவிப்பினை மேற்கொண்டுவிட்டு, வட கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் வரதராஜபெருமாள் நாட்டைவிட்டுத் தப்பிச் சென்று இந்தியாவில் வாழ்ந்தார்.

ஆனால், இப்போது இந்த மாகாண சபை முறைமை எனும் வலுப்படுத்திக் கொடுங்கள் என்று கேட்பவர்களும், இதில் ஏதுமில்லை தமிழர்களுக்கு சுயாட்சி அதிகாரத்தினைக் கொடுங்கள் என்று கேட்டுக் கொண்டிருப்பவர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள்.


நிதி சார்ந்த ஊழல்களையும், மோசடிகளையும் நடத்தி முடித்து அரசியல், அதிகாரத் துஸ்பிரயோகங்களையும் தமக்குள்ளேயே வைத்துக் கொண்டிருக்கின்ற ஒரு நாட்டில் பொருளாதார நெருக்கடியும், அதன் விளைவுகளும் சர்வ சாதாரணமாகவே இருக்கும். இதனை மாற்றியமைத்து விடுவது சாதாரண விடயமல்ல. சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள், அமெரிக்க அரசாங்கத்தின் பிரதிநிதிகள் கொடுக்கும் அறிக்கைகளும், அவர்களின் திட்டங்களும் நாட்டை மீட்க வேண்டும் என்று நம்பினாலும், புலம்பெயர் உறவுகளின் ஒத்தாசை முக்கியமே!. அதற்கு ஒரே தீர்வு தமிழர்களின் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வே.

இந்த இடத்தில், 2009க்குப் பின்னர் அழிக்கப்பட்ட நமது பிரதேசங்கள் தற்போது படிப்படியாக வளர்ச்சியுற்று வருகின்றது. ஆனால், நமது மக்களின் வாழ்வாதாரம் உயரவில்லை. புலம்பெயர் தேசத்திலே எமது மக்கள் பலர் பெரிய செல்வந்தர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் நினைத்தால் வடக்கு, கிழக்குப் பிரதேசத்தில் இருக்கும் எமது மக்களின் வறுமையை ஒழிக்கலாம். நலிவுற்ற எமது மக்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்தலாம். ஆனால், அவர்களுக்கு மனம் இருந்தாலும், அதற்கான களம் இல்லாமல் இருக்கின்றது என்ற தமிழ் அரசியல்வாதிகளின் கருத்து தொக்காக நிற்கிறது.

பெருளாதார ரீதியில் அதள பாதாளத்தில் தள்ளப்பட்டிருக்கும் இந்த நேரத்தில், புலம்பெயர் தேசத்திலே வாழும் எமது தமிழ் மக்களை இங்கு முதலீடுகளை மேற்கொள்ளுமாறு இலங்கையின் ஆட்சியாளர்கள் அழைக்கின்றார்கள். இந்த அழைப்பானது சிங்களப் பேரினவாதத்தின் அதிகாரப் பசிக்குப் பலியானதாக ஆகிவிடக் கூடாது என்ற முன்னெச்சரிக்கையே இப்போது நம் எல்லோருக்கும் இருக்க வேண்டும். இதனைவிட வேறொன்றுமில்லை. ஆனாலும் முயற்சிக்க வேண்டும்.



INNENSTADT WEST
தமிழர் அரங்கம்
Kulturbüro
Stadt Dortmund
Kulturbetriebe
DORTMUND
தமிழர் தெருவிழா
2022
Straßenfest der Tamilen
02.09.2022
Fr. 16:00 - 00:00
03.09.2022
Sa. 11:00 - 00:00
04.09.2022
So. 12:00 - 19:00
Park der Partnerstädte
Bundesstraße 54
Bundesstraße 54
westentor
Rheinische Str.
3 நாட்கள்
வெள்ளி - சனி - ஞாயிறு
Dortmunder U - Park der Partnerstädte
VMDO
Verbund der sozial-kulturellen Migrantenvereine in Dortmund e.V.
samo.fa Plus
Integrationsagentur der Stadtteil-Schule Dortmund e.V.
தமிழர் கலையகம் TKD
Tamilische Kulturverein Dortmund
SIVANDIGITAL
SOUND & MORE
ortel MOBILE
ஊடகஅனுசரணை
வெற்றிமணி
அகரம்
தமிழ் ரைம்ஸ் TAMIL TIMES
STS
தமிழ் MTV
IBC தமிழ்
Lankasri
ETR
0151633 633 33 | 0157 370 50 110 | 0179 26 30 317 | 0151 279 909 90

# மழை மட்டுமே விட்டுள்ளது தூவானம் இன்னும் மிச்சமிருக்கு

கோத்தபய ராஜபக்சேவின் இராஜினாமாவோடு இந்த நாட்டில் சிறுபான்மை சமூகத்திற்கான விடிவு கிடைத்துவிடுமென்றும், இனவாதம் முற்றாக இல்லாமல் ஆகிவிடும் என்று நாம் அவசரப்பட்டு சந்தோஷப்பட்டு விட முடியாது. காரணம், மழை மட்டுமே விட்டுள்ளது - தூவானம் இன்னும் மிச்சமிருக்கு.

தனது இரத்தம், நாடி, நரம்பு, நாளம் ஆகியவற்றில் முற்றாக இனவாதம் ஊறிப்போன பலர், இன்னும் பசுத்தோல் போர்த்திக்கொண்டு வலம் வருகின்றனர். ராஜபக்சக்களை விடவும் மோசமான இந்த இனவாதிகளின் பிடியில் அதிகாரம் மாறுமேயானால், சிறுபான்மை சமூகமான தமிழ் முஸ்லிம் சமூகம் இன்னும் பல நெருக்குவாரங்களை அனுபவிக்க நேரிடலாம்.

டலஸ் அழகப்பெரும, பாட்டாளி சம்பிக்க ரணவக்க, சரத் பொன்சேகா இவர்கள் மூவரும் இனவாதத்தை வெளிப்படையாகக் காட்டாவிட்டாலும், இவர்களுக்குள் புரையோடிப் போயிருக்கும் இனவாதப் பேய்கள் பல தடவைகள் வெளியே வந்துள்ளன. அதிலும் பாட்டாளி சம்பிக்க நவீன இனவாதத்தின் தந்தை எனலாம்.

விமல்வீரவன்ச, உதயகம்மன்பில, அதுரலிய ரத்னதேரர், சன்ன ஜயசுமன இவர்கள் நால்வரும் வடிகட்டிய இனவாதிகள். இவர்களிடம் ஆகக்குறைந்தது 1% வீதம்கூட மதநல்லிணக்கத்தையோ, சமூக ஒற்றுமையையோ ஒருபோதும் எதிர்பார்க்க முடியாது. ஈஸ்டர் தாக்குதல் மற்றும் டொக்டர் ஷாபி விடயம், முஸ்லிம்களின் மையத்துக்களை எரித்தல் போன்ற விடயங்களில் இவர்கள் செயற்பட்ட விதம் கலப்படமில்லாத இனவாதமாகும். அவ்வாறே தயாசிரி, துமிந்த திசாநாயக்க, ஜோன்சன் பெனார்ன்டோ, மகிந்தானந்த அலுத்கமகே, ரோஹித அபேகுணவர்தன, நிமல் லான்சா ஆகியோரின் இனவாத முகங்கள் அவ்வப்போது வெளிப்பட்டுள்ளன. இவர்கள் அனைவரும் இன்னும் பாராளுமன்ற உறுப்பினர்கள்தான்.

மேலே சொன்ன இனவாதிகளின் கைக்கூலிகள் நா(ஞா)னசார, டான் பிரியசாத், சத்துர, விராஜ், நாமல்குமார மற்றும் இன்னும் சில பௌத்த பிக்குகள் இன்னும் இந்தநாட்டில் வாழ்கிறார்கள். இவர்களுக்குப் பிரச்சாரம் செய்ய தெரண மற்றும் ஹிரு ஆகியன இன்னும் இயங்குகின்றன. இவர்களின் தேர்தல் மூலதனம் பணமும், இனவாதமும் மட்டுமே!

நாட்டில் ஏற்பட்ட அசாதாரணமான பொருளாதார வீழ்ச்சி, தொழிலின்மை, வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பு, அத்தியாவசிய பொருட்களின் சடுதியான விலையேற்றம், வருமானமிழப்பு, வறுமை, பொருளாதாரச் சுமை என்பனதான் பெரும்பான்மை சமூகத்தைப் போராட்டத்தின் பக்கம் தள்ளின. இப்போராட்டத்தில் சிறுபான்மை சமூகமும் இணைந்து கொண்டன. போராட்டக்காரர்களின் அர்ப்பணம், விடா முயற்சி, தன்னம்பிக்கை இனமத பேதமற்ற திறந்த செயற்பாடு, திறனற்ற ஜனாதிபதியை ஓடி ஒளியவைத்ததே தவிர, இந்த இனவாதப் பேய்களுக்குச் சரியான மருந்தினை இன்னும் கட்டவில்லை.

கோட்டாவின் ஆட்சியைக் கொண்டு வருவதில் பங்காளியாகச் செயற்பட்ட மைத்திரிபால இப்போது பத்தினி வேசம் போடுகிறார். இந்த எல்லா சீரழிவுகளுக்கும் மைத்திரியும் பிரதான காரணமே என்பதை, அவர் வசதியாக மறந்து போனார்.

நிலையான அரசொன்று அமைந்து, மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் தீர்ந்தால் அத்தோடு போராட்டம் முடிந்து விடுமோ என்ற ஐயம் இருக்கிறது. முஸ்லிம், தமிழ் சமூகம் எத்துனை நெருக்குவாரங்களுக்கு அகப்பட்டாலும், மகிந்தவின் விசுவாசிகளாக அதாவுல்லாஹ், முஷர்ரப், அலி சப்ரி, அலி சப்ரி ரஹீம், மர்ஜான் பளீல், காதர் மஸ்தான், ஹாபீஸ் நசீர் ஆகியோரும், தமிழர் வாக்கினால் பாராளுமன்றம் சென்ற டக்லஸ் தேவானந்தா, வியாழேந்திரன், அங்கஜன் இராமநாதன், பிள்ளையான், ஜீவன் தொண்டமான் ஆகியோர் ஒருபோதும் மனதளவில் மாறப்போவதில்லை.

இதேவேளை முஸ்லிம் சமூகத்தின் மீதான வீண்பழிகளின் போது, பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களான அநுரகுமார திசாநாயக்க, ராஜித சேனாரத்ன, குமார் வெல்கம, ரணில் விக்ரமசிங்க, சஜித் பிரேமதாச, ஹரீன் பெனார்ன்டோ போன்றோர் குரல் கொடுத்துள்ளனர். ஏன் மகிந்தகூட ஈஸ்டர் தாக்குதலின் பின்னரும், ஜனாசா எரிப்பின் போதும் முஸ்லிம் சமூகத்திற்கு ஆறுதலான கருத்தை வெளியிட்டார். ஆனால், அவரின் குரல் எடுபடவில்லை அல்லது ஓங்கி ஒலிக்கவில்லை.

எனவே, சிறுபான்மை சமூகமான தமிழ் முஸ்லிம் சமூகத்தைப் பிரதிநிதிப்படுத்தும் போராட்டக் களத்திலிருந்த தோழர்கள் அவ்வாறே போராட்டக்காரர்களோடு சாமாந்திரமான போக்கினை கையாளும் பாராளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம், முஜிபர் ரஹ்மான், மனோ கணேஷன், மரைக்கார், பழனி திகாம்பரம் போன்றோர் இனவாதம் பேசி சமூகங்களை துருவப்படுத்திய, இன்னும் துருவப்படுத்த சந்தர்ப்பம் பார்த்து காத்திருக்கும் பேய்கள் தொடர்பில் தெளிவு படுத்த வேண்டும்.

யார் ஜனாதிபதி ஆனாலும், யார் பிரதமரானாலும் எமக்கு பிரச்சினையில்லை. வருகிறவர்கள் சிறுபான்மை சமூகங்களான தமிழ், முஸ்லீம்களைச் சீண்டாமல் நிம்மதியாக வாழ விட்டாலே கோடி புண்ணியம்.

மழைவிட்டது போலவே, இனவாதத் தூவானமும் விரைவில் விடுபட்டு சகல இனமும் ஒற்றுமையான நிம்மதியான வாழ்க்கைக்காகப் பிரார்த்தனை செய்வோம். எல்லோருக்கும் பொதுவான இறைவன் நமது நாட்டுக்கு நல்லருள் புரிவானாக.



# உள்ளம்

## திறக்கும் உண்மைகள்

“உளம் திறக்கும் உண்மைகள்...” என்ற தலைப்பில்
உங்கள் மனதிலிருக்கும் புதிய சிந்தனைகளை
4 - 6 வரிகள் கொண்ட கவிதையாக்கி எமக்கு அனுப்பி வையுங்கள்.

### கூறல்..

இவர்கள்
இப்படித்தான்
புறந்தள்ளு
கம்பளிப்புழு
அடைபடுவதாகக்
கூறுவர்
நீ
பட்டாம்பூச்சி
பிறப்பதாகக்
கூறிச் செல்..

### நிழல்..

பாலைவன
ஒட்டகம்
தன் நிழலில்
இளைப்பாறுவது போல்
சிலரது வாழ்வும்
தனக்குத் தானே
ஆறுதலாய்...

### தவறு..

வாழ்க்கை
நம்மை
வழிப்போக்கனாய்
வழி நடத்திச்
சென்றாலும்
சில நேரங்களில்
பாதை
தவறித்தான் போகிறது..

● பாமினி

### பறம்பு மலைப் பாரி

தமிழின் அழிவில்லா தங்க மகனே
அமிழாது உன்னின் அற்புத ஆட்சி
வேங்கையாய் தமிழன் வேனிலில் பறக்கு மட்டும்
ஓங்கியே ஒலிக்கும் ஓங்கார உன்னுடைய
புகழே ஆதிப் புலியான மன்னனே
தமழின் நேசனே தவமாய் உதித்த
தன்மான சிங்கமே தரணியை தமிழால்
கட்டிப் போட்ட குறிஞ்சிக் குமரனின்
பட்டத்து இளவரசாய் பகலிலும் இரவிலும்
அன்னைக்கு காவலாய் அகிலத்தில் இருந்தவாறே
தேனாகி இசையாகி தெவிட்டாத பாடல்களை
கோனாகி நின்றே கொடுத்த அண்ணலே
ஔவைக்கு நெல்லியை ஔடதமாய் வழங்கி
அவை நிறைந்த அறிஞர் குழாமை
தந்த தன்னிகர் தனக்கே உரியனே!
சூரியனாய் வறுமயை சுட்டெரிக்கும் பாங்கானவனே!
பாரியே பறம்புமலையை பாரில் நிலை நாட்டிய!
அற்புதனே வாழ்க வாழ்க வாழ்க
பொற்பின் நாயகனே பொன்னான மன்னனே!



### வறுமைக்கும் விடிவுண்டு

வெறுமை தருகிற வெற்றுப் பந்தா
வறுமை தருகிற மூலதனம் அதுவே
அதனை நீக்கவே அச்சம் தவிர்த்தே
முதலாய் ஊக்கம் முன்னே வழங்கி
சுறுசுறுப் புடனே சூரியன் ஏறிவர
சுடுகிற வெயில் சுற்றத்தை நனைக்க
முன்னே எழுந்தே முயலாய் பாய்ந்தே
அன்றே செயலை அற்புத மாகவே
இன்பத் துடனே இரும்பாக அல்லாது
கரும்பாக நினைத்து கறுத்த மேனியை
அரும்பாய் நோக்காதே அரமாய் தேய்த்தே
பொருளா தாரம் பொருளை வழங்கவே
தருவாய் மாறியே தரணிக்கு உழைத்திடு
எவ்லா மிடிமையும் எங்கும் இல்லாதே
அல்லல் தொலைத் ஆர்வமாய் உழைத்திடு

● கவிஞர். ரஜிதா அரிச்சந்திரன்
கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம்,
யாழ்ப்பாணம்

## அகர கவிக்களம்....

### சிரிப்பும், செய்கையும்

சிலரது சிரிப்பு செய்கை வியப்பானது.
சிலர் தமது தேவைக்குப் பயன்படுத்துவது.
மற்றவரை மடையராக்கி,
தான் புத்திசாலியாகுவது.

எள்ளி நகையாடும் மனிதர்
அள்ளி எடுப்பார் அதையே!.
பின்புறம் கூறுவார் ஒன்று
முன்புறம் செய்வார் தனக்கே நன்று.

இவரை எந்த இனத்தில் சேர்ப்பது
ஐந்தறிவா ஆறறிவா.
ஐந்தறிவுக்கு வஞ்சனை தெரியாதே
ஆறறிவுக்குத் தானே அது தெரியும்.

அப்ப ஆறறிவுதான் எனலாம்.
புரிபவர் புரிந்தால்
தெளிவர் சிறிதேனும்
திருந்திடலாம் ஒரு நாளேனும்.

### மனிதம் எங்கே?

கலியுகம் முற்றிவிட்டது
கண்டவனும் கதவடைக்கிறான்.
கொண்டவனோ அலறித்துடிக்கிறான்
வண்ட வாளங்கள் கப்பலேறுகின்றன.
தொண்டு செய்வதாகக் கூறித்
தண்டு வளைக்கிறார்.
தகுதியை விட ஆசை மேலிட
தவறுகள் செய்கிறார்.

இவற்றைக் கேட்க யாருமில்லை
அந்தத் துணிவில் அம்பலத்தில்
ஆடுகின்றார் அற்பப் பூச்சிகள்.
இவரிடம் மனிதம் எங்கே
என எதிர் பார்க்கலாமா?

● கெங்கா ஸ்டான்லி

### தீ!..

சிகரட் நுனியில் நீங்கள்
பற்றவைக்கும் தீ
உங்களை நீங்களே
அழித்துக்கொள்ளும் தீ!..

### இருப்பு!..

இருப்பது பொய் இறப்பது மெய்
இருக்கும்வரை இல்லார்க்கு
இரங்கி உதவுவதே
இருப்பதில் மகா புண்ணியம்!..

### நேசிப்பு!..

உன்னைக் கருவறையில் சுமந்த
அம்மா என்னும் தெய்வத்தையும்
உன் கருவைச் சுமக்கும்
மனைவியையும் இறுதிவரை நேசி!..

### வெறுமை!..

பெயர் விவசாய நாடு
பட்டினியில் மக்கள்
தற்கொலையில் விவசாயிகள்
விளைநிலங்கள் வெறுமையாய்!..

வைரமுத்து சிவராசா, யேர்மனி

### உண்மை

பொய்யான உறவுகளுக்குமுன்
புன்னகையும் ஒரு பொய்தான்
உண்மைக்கு முன்னால் கோபமும்
ஒரு புன்னகைதான்

உள்ளத்தில் உண்மைஇருந்தால்
தைரியம் தானாக வந்துவிடும்
நடக்கும் பாதை கூட நேராகிவிடும்

உண்மைக்காக எதையும் இழக்கலாம்
ஆனால் எதற்காகவும்
உண்மையை துறந்துவிடாதே

● நந்து இலண்டன்



**"எமது உரிமைப் போராட்டத்தின் பிரதான முட்டுக் கட்டைகளாக அமையப் போவது சிங்களப் பேரினவாதிகளோ, சிறிலங்கா இராணுவமோ அல்ல. தத்தமது கேந்திர மற்றும் பொருளாதாரக் குறிக்கோள்களை அடைவதற்கு அமெரிக்கா, இந்தியா, சீனா, ஐரோப்பிய யூனியன் என்பன இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் வகுத்துக் கொண்டிருக்கிற வியூகங்களை அரசியல் ரீதியாகவும், போரியல் ரீதியாகவும் எதிர் கொண்டு எப்படி நாம் வரலாறு படைக்கப் போகின்றோம்?"**

**- தராகி சிவராம்**

# எப்படி நாம் வரலாறு படைக்கப் போகின்றோம்?

ஈழ இனஅழிப்புப் போரை நடத்திய நாடுகள் நடத்தும் ஐ.நா. சபையும், அதன் அங்கமான மனித உரிமை ஆணையமும் கடந்த 13 வருடமாக வழங்க முன்வராத போர்குற்ற நீதி விசாரணை, வருகிற செப்டம்பர் மாத அமர்விலும் எமக்குப் பட்டை நாமம் போட உக்கிரெயின் ரஷியப் போர் காரணம் ஆகலாம்.

இத்தகைய உலக கேந்திர அரசியல் யதார்த்தத்தைக் காலத்துக்குக் காலம் வாரப் பத்திரிகைக் கட்டுரைகளாக சர்வதேச நிபுணத்துக்கு ஈடான தரத்துடன் எச்சரித்து வந்தவர் புளொட் இயக்கப் போராளியாக அறிமுகமான திரு.தராகி சிவராம். அப்படித்தான் நானும் கண்மூடித்தனமாக நம்பி இருந்தேன். அதனால் அவரை ஒரு தேவ தூதனாகவே பார்த்தேன். ஆனால் உண்மையில் அவர் மர்மம் நிறைந்த இரட்டைப் பிறவியாக தமிழீழ விடுதலைப் போரின் அழிவுச் சக்தியாக வாழ்ந்தார் என்பதை, ஏப்ரில் 28,2022ல் இலங்கை நெற் இணையத்தில் வெளியான சிவராம் பற்றியக் கட்டுரை அம்பலமாக்கி உள்ளது.

அக்கட்டுரையின் பல முக்கிய தகவல்களை, எமது மக்கள் அவசியம் அறிந்து, தமது வருங்கால அரசியல் வேலைத் திட்டங்களை முன்னெடுக்கத் தவறினால், எமது மக்களின் தாய் மண் மீட்புப் போரில் வெற்றி என்பது முயற் கொம்பாகி விடும். அத்தகையப் புரிதலோடு எம்வரின் அரசியல் திட்டமிடப்பட வேண்டும் என வலியுறுத்தக் கடமைப் பட்டுள்ளேன்'. சிவராமின் மிக நெருங்கிய நண்பரும், இயக்க ஆதரவாளனான எனது நண்பரின் கூற்றுப் படி, சிவராம் புரிந்துகொள்ள முடியாத இரட்டை வாழ்க்கை வாழ்ந்த மர்ம மனிதர் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை. அதற்கான ஆதாரங்கள் பலவற்றை இங்கு குறிப்பிட்டக் கட்டுரை தருகின்றது.

சிவராம் முதலில் விடுதலைப் புலிகளில்தான் சேர விண்ணப்பித்தார். எனினும், மாத்தையாவினாலும், கிட்டுவினாலும் தனித்தனியே விடுதலைப் புலிகளில் சேருவதற்கு நம்பக மற்றவர் என்று சிவராம் திருப்பி அனுப்பப் பட்டார். இதன் பின்னரே சிவராம் புளட்டில் அசோக் எனப்படுகிற யோகன் கண்ணமுத்துவின் "அணைவோடு" இணைக்கப்பட்டார்.

இக்காலத்தில் தான் உமா மகேஸ்வரன் எல்லோரையும் அடிப்படையின்றி சந்தேகிக்கின்ற **paranoid** மனோவியாதிக்குட் பட்டிருந்தார். தன்னுடைய ஆங்கிலப் புலமையையும், மகேஸ்வரனின் பலவீனங்களையும் சாதுரியமாகப் பயன்படுத்தி, சிவராமன் தலைமைக்கு மிகநெருக்கமாக, குறுகிய காலத்திலேயே வந்துவிட்டார். இதன்போது புளட்டின் ஜனநாயக விரோதப் போக்குகளுக்கும், உட்கட்சி சித்திரவதைகளுக்கும், படுகொலைகளுக்கும் விசுவாசமாக உடந்தை போனார்.

1984, 1985 காலப் பகுதியில், ஒரு தடவை யாழ்ப்பாணம் குருநகரில் சிவராமும், தீபனேசனும் வீதியில் தற்செயலாக தீப்பொறி குழுவினரைச் சேர்ந்தவர்களை எதிர்கொள்ள நேர்ந்தது. உடனடியாகவே சிவராம் தனது

பையிலிருந்து ***SMG***யை எடுத்து ***load*** பண்ணி, அவர்களை நோக்கி சுடத் தயாரானார். அதிஸ்ரவசமாக பொது மக்கள் அவ்விடத்தில் கூடி விட்டதால் கொலை எதுவும் நடக்காமல், இரு தரப்பினரையும் பிரித்து அனுப்பி வைத்தனர்.

மேலும், பேராதனைப் பல்கலைக்கழக பல் மருத்துவத்துறை மாணவனான செல்வம் (வல்லிபுரம்) என்பவர், தனது பட்டப்படிப்பையே தியாகம் செய்து போராட வந்திருந்தார். இந்த செல்வமும், அகிலன் (சாமித்தம்பி லோகேந்திர ராசா, கடற்கரைச் சேனை, மூதூர்) என்கிற இன்னொருவரும் சந்ததியரோடு சேர்ந்து, ***PLOTE***இன் உட்கட்சிப் படுகொலைகள், ஜனநாயகமின்மை என்பவற்றிற்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர். மட்டக்களப்பிலிருந்து கைதேர்ந்த கொலையாளியான வெங்கட் (பூனைக் கண் கொண்டவன்) ஐயும் அழைத்துக் கொண்டு, சிவராம் தலைமையில் ஒரு குழு, மூதூருக்கு அகிலன் செல்வத்தைத் தேடிப் போனது.

மூதூரில் ஒரு வீட்டிற்குள் சென்ற சிவராமும், வெங்கட்டும் அங்கிருந்த அகிலன் மற்றும் செல்வனையும் ***PLOTE***இன் மகளிர் பிரிவுத் தளபதியான கரோலினையும் கண்டனர். சிவராமும், வெங்கட்டும் கரோலினை தவிர்த்து, அகிலன், செல்வனைக் கடத்திச் சென்று, மூதூரில் ஒரு வயல் வெளியில் கொன்று, அவ்வயல் வெளியிலேயே இருவரையும் புதைத்துத் திரும்பினர்.

மேற்கூறிய இரண்டு தகவல்களையும் நம்பகரமான மனித உரிமை அமைப்பான மனித உரிமைகளுக்கான யாழ் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் உறுதிப் படுத்தியுள்ளது.

***<http://www.uthr.org/SpecialReports/spreport19ptII.htm#Who)>***

***PLOTE*** உறுப்பினர்களுக்கு சிவராமின் அகிலன், செல்வன் கொலைகள் நீண்ட காலமாகத் தெரிந்த, திறந்த இரகசியமே!. இதனைவிட தலைமைக்கு எதிராக அகிலன், செல்வம் கிளர்ச்சி செய்தமையைப் பயன்படுத்தி, தனிப்பட்ட பெண் விவகாரம் முதலியன சம்பந்தப்பட்ட கோப தாபங்களுக்காக இவ்விருவரும் சிவராமினால் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகிறது.

சிவராமைப் பற்றி நல்ல அபிப்பிராயம், அவருடன் பழகிய நல்ல மனிதர்களிடம்

அகரம்
விளம்பரத்
தொடர்புகளுக்கு
00 49 176 47 11 87 11

கிடையாது. அவர்கள் சொல்லுகிற குற்றச்சாட்டுகளில் ஒன்று சிவராம் பிறரை "அள்ளி வைப்பதில்" வல்லவர் என்பது.

*1.* மாலைத் தீவுக்குப் படையெடுத்துச் சென்ற தன்னுடைய சக தோழர்களான புளட் உறுப்பினர்கள் பற்றிய விபரங்களை இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகத்தில் "அள்ளி வைத்தவர்" சிவராமே என்பதை, சிவராமுடன் பல்கலைக் கழகத்தில் ஒன்றாகப் படித்த இப்போது அமெரிக்காவின் மினசோட்டா பல்கலைக்கழக துணைப் பேராசிரியராக இருக்கும் கார்ட்றி இஸ்மாயில் தான் லைன்ஸ் ***(www.lines-magazine.org )*** சஞ்சிகையில் எழுதிய ***'Mourning Sivaram'*** என்ற கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார். இதே "அள்ளி வைப்பு" தகவலைப் பாரிஸ் ஈழமுரசுவில் ***90***களின் ஆரம்பத்தில் வெளிவந்த தொடரான 'காந்தி தேசத்தின் மறுபக்கம்' என்ற புளட் வரலாற்றைப் பற்றி எழுதப்பட்ட ***Siva Sinnapodi*** அவர்களின் கட்டுரையிலும் காணலாம்.''

சிவராம் நம்பகமற்றவர் எனப் புலிகள் இயக்கத்தில் இணைவதைத் தளபதி கிட்டுவும், மாத்தையாவும் அவரைத் திருப்பி அனுப்பினர். அதன் பின்னரே புளொட்டில் இணைந்தார் என்கிற செய்தியால் அவருக்குப் புலிகள் அமைப்பில் இயல்பாகவே காழ்ப்புணர்ச்சி ஏற்படும் வாய்ப்புகளே அதிகம். அதுவே அவரது வடக்கு, கிழக்குப் பிரதேசவாதமும், கருணாவைப் புலிகள் அமைப்பிலிருந்து வெளியேற்றும் திட்டமும் வலுப் பெற்றிருக்க வேண்டும். இச்சம்பவத்தை இலங்கை நெற் கட்டுரை இப்படி விபரித்துள்ளது:-

விடுதலைப் புலிகளிலிருந்து கருணா தான் பிரியப் போவதாக அறிவித்த ஆரம்பத்தில், சிவராம் கூட கரிகாலன் மற்றும் ரமேஷ் ஆகியோரைப் போல கருணாவின் பக்கமே இருந்ததாக இப்போது பரவலாக நம்பப்படுகிறது. சிவராம் புளட்டிலிருந்த ஆரம்ப காலங்களில் இருந்தே கிழக்கு மாகாணத்தின் நலன்களிலும், முக்கியத்திலும் அக்கறை

கொண்டிருந்தவாராக அறியப்பட்டவர். வன்னிப் புலிகளும் இதனடிப்படையில் சிவராமே கருணாவைத் தூண்டி விட்டிருக்கலாம் என்றும் சிவராமை சந்தேகித்தனர்.

பிளவு ஏற்பட்டபோது, கருணாவின் சார்பாக சிவராமே தங்களை முதன்முதலாகத் தொடர்பு கொண்டார் என்பதைத் தமிழ்க் கூட்டமைப்பிலுள்ள ஒரு அரசியல் கட்சியின் வட்டாரமொன்று தெரிவித்ததையும் கரிகாலனும், ரமேஷம் வன்னித் தலைமைப் பக்கம் கட்சி தாவிய போதே "இனிக் கருணா நிலைக்க முடியாது" என்ற முடிவுக்கு சிவராம் வந்ததையும் ***UTHR (J)*** அறிக்கைக் குறிப்பிடுகிறது.

வன்னிப் புலிகள் மிகச் சரியாகவே தன்மீது சந்தேகம் வைத்திருப்பது சிவராமுக்கு மிகத்தெளிவாகவே தெரிந்திருக்கும். இதற்கிடையில் கருணாவின் படைகள் கலைந்து போன பின்னர், சிவராமின் மைத்துனரான கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியர் வன்னிப் புலிகளால் கருணா விவகாரம் தொடர்பாக "கைது செய்யப்பட்டு" விசாரிக்கப்பட்டார். எப்படி தனது பிழைப்புக்காக ***1997*** இல் தமிழ் நெற் தொடங்கிய போது, தன்னுடைய புலி விமர்சனத்தைக் கைவிட்டு, புலிச்சார்பு நிலை எடுக்கத் தலைப்பட்டாரோ, அப்படி ஒரு நிலைமை இப்போதும் சிவராமுக்கு.

இம்முறை வன்னிச் சார்பு எடுக்க வேண்டிய நிலைமை. சிவராம் வன்னிப்புலிகளிடம், தன் உறவினரான பேராசிரியரின் விடுதலையை வேண்டி ஓடிப்போனார். (கருணாவை கடுமையாகக் கிண்டலடித்து சிவராம் எழுதிய வீரகேசரி கட்டுரை வன்னியில் வைத்துத்தான் எழுதப்பட்டது. அதனை பொட்டம்மான் மெய்ப்புப் பார்த்து, சிவராமுக்கு பாவவிமோசனம் அளித்து அனுப்பினார்.)

தமிழ் நெற்றுக்கு நிதி செலவளிப்பவர்களில் வன்னிப் புலிகளின் ஆதிக்கமே இருக்கும். புலிகளின் வெளிநாட்டு அமைப்புக்களிலும், கிழக்கு மாகாணத்தவரின் செல்வாக்கு இல்லை. வடக்கு மாகாணத்தவரினதும் வன்னிப் புலிகளினதும் அதிக்கமே!. தமிழ் நெற்றின் ஆசிரியாராக தொடர்ந்தும் இருக்க வேண்டும், புலிகளின் பணத்தில் உலகச் சுற்றுலாப் பயணங்களும் செய்ய வேண்டும் என்றால், (பிரித்தானிய சாம்ராச்சியம் கோலோச்சிய காலத்தில் ஒருவர், உலகம் சுற்ற வேண்டுமென்றால் அவர் பிரித்தானியக் கடற்படையில் சேர வேண்டும் என்பதைப் போல) வன்னித் தலைமைப் பக்கம் சாய்வதைத் தவிர வேறு வழியே இல்லை. கருணாவை மிகக் கடுமையாகக் கிண்டலடித்து, கருணாவுக்கான ஒரு பகிரங்கக் கடிதத்தை வீரகேசரியில் எழுதினார். சிவராமின் பெருமளவிலான கட்டுரைகளைப் போலவே அதுவும் ஒரு கட்டணம் செலுத்தாத விளம்பரமே!.

சிவராம் தனது தனிப்பட்ட பாதுகாப்பில் கடந்த காலங்களில் மிகக் கவனமாகவே இருந்துள்ளார். ***1986*** ஆம் ஆண்டு ரெலோ இயக்கம் புலிகளால் அழிக்கப்பட்ட பின்னர், மற்றைய இயக்கங்களையும் அழிக்கத் தொடங்கினர். அடுத்ததாக புளட் மீது புலிகளால் யாழ் குடாநாட்டில் தாக்குதல் தொடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப் பட்ட கடைசி நேரத்தில் புளட்டின் உறுப்பினர்களாக யாழ் நகரில் தங்கி இருந்தவர்கள் சிவராமும், மெண்டிஸ் என்கிறவருமே.

இருவருமே நிலைமையின் உக்கிரத்தைத் தணிக்கும் பொருட்டு, ராஜதந்திரமான ஒரு நடவடிக்கையைச் செய்தனர். புளட் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தனது ராணுவ நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்வதாக ஒரு பத்திரிகை அறிக்கையைத் தயார் செய்து, அதனை யாழ்ப்பாணத்தின் நான்கு பத்திரிகைகளிலும் வெளிவருமாறு செய்தனர். அறிக்கையைப் பார்த்த விடுதலைப் புலிகளின் திலீபன், ஏன் இவ்விதமான நடவடிக்கையை அவசரப்பட்டுச் செய்ததாக இரண்டு புளட் உறுப்பினர்களிடமும் நேரடியாகவே வந்து கேட்டார். இதற்குப் பதிலாக திலீபனிடம் சிவராம் நேரடியாகவே சொன்னார்

"உங்களை நம்பேலாது மச்சான்"

இதனோடு மட்டும் சிவராம் நின்றுவிடாது, விரைவிலேயே ஒரு படகில் தமிழ்நாட்டுக்குத் தப்பிச்சென்று விட்டார். மெண்டிஸ், கிட்டுவோடு நட்பு பாராட்டுகிறவர். கிட்டு, மெண்டிஸின் உயிருக்கு உத்தரவாதம் வழங்கப்படும் என்று கூறியதை நம்பி, யாழ்ப்பாணத்திலேயே மெண்டிஸ் தங்கியிருந்தார். எனினும் சிவராம் வெளியேறிய சில தினங்களிலேயே மெண்டிஸ் புலிகளால் "கைது செய்யப்பட்டு" சில நாட்களின் பின் கொல்லப்பட்டார்.

இந்திய, இலங்கை ஒப்பந்தத்தை அடுத்து, புலிகளோடு பேச்சு வார்த்தைகளை நடத்தவென்று வாசுதேவா தலைமையிலான ஒரு குழு, கிழக்கு மாகாணத்தில் புலிகளைச் சென்று

# Jaffna Stores

**Geschäftsführer : Herr Thayaharan Nadarajah**

தயாரிப்புகளின்
ஏக விநியோகஸ்தர்கள்

மொத்தமாகவும்,
சில்லறையாகவும்
NSR தயாரிப்புகளை
விற்பனை செய்ய
விரும்புவோர்
தொடர்புகொள்ளுங்கள்

25
ஆண்டுகளாக
உங்களோடு நாங்கள்...

## மண்மணம் மாறாத சுவைதரும்
## தரமான என்.எஸ்.ஆர். தயாரிப்புகள்



ஆசியா, ஆப்பிரிக்கா, சீனா நாடுகளின் அனைத்து விதமான உணவுப் பொருட்களுடன் மரக்கறி வகைகள், மீன் வகைகள், இறைச்சி வகைகள் அனைத்தையும் தரமாகவும், மலிவாகவும் பெற்றுக் கொள்ள பீல்பெல்ட் நகரில் ஒரு மாபெரும் நிறுவனம்

www.jaffnastores.com
info@jaffnastores.de

Tel. - 0521 174794
Mobile - 01732807906

Feilenstraße 8
33602 Bielefeld



சந்திக்கவிருந்தது. புலிகளை இது தொடர்பாக வாசுதேவா நம்புவதைக் கடுமையாக எச்சரித்த சிவராம், தானும் அக்குழுவில் செல்வதைத் தவிர்த்தார். முடிவில் பேசவென்று அழைத்து வாசுதேவா முதலியோரை புலிகள் கொன்றது எல்லோருக்கும் தெரிந்ததே!.

இவ்வகையாக தனது பாதுகாப்பு சம்பந்தமாக மிகச்சரியான மதிப்பீடுகளைச் செய்த சிவராம், தனது இறுதிக் காலத்தில் தனது பாதுகாப்பு சம்பந்தமாக மிக அசட்டையாக இருந்தது அதிசயமே!. அதுவும் புளட்டின் உட்கட்சிப் படுகொலைகளின் இரத்தக்கறைகளைக் காவிக்கொண்டும் தனது சக புளட் உறுப்பினர்களுக்குத் தொடர்ச்சியாகத் துரோகம் செய்து கொண்டும், கருணாவோடு கொழுவிக் கொண்டும், வன்னிப் புலிகளின் உத்தியோகப் பற்று அற்ற பிரச்சாரச் செயலாளராகக் கொழும்பில் இயங்கிக் கொண்டும், இன்னமும் கொழும்பில் வைத்து ஒரு "பத்திரிகையாளரான" தான் கொல்லப்பட மாட்டேன் என்று சிறீலங்காவின் ஜனநாயகம் நீதி சட்டம் ஒழுங்கு என்பவற்றில் நம்பிக்கை வைத்து இருந்ததானது, ஒரு முரண் நகையே!.

சிவராமைப் பற்றி தமிழ் ஆங்கிலப் பத்திரிகைகள் அவர் ஒரு துப்பாக்கி தாங்கிய போர் வீரர் என்ற மாதிரியான பிரமைகளைக் கட்டமைத்துள்ளன. உண்மையில் சிவராம் ஒரு சமரில் **(battle)** கூட பங்குபற்றியதில்லை. அவரது துப்பாக்கியிலிருந்து வெளிவந்த குண்டுகள் யாரையாவது கொன்றது என்றால், அது அவரது சக புளட் இயக்கத் தோழர்களான அகிலனும், செல்வனுமே!.

மாமனிதர் விருது வழங்கப்பட்டதை அடுத்து, தமிழ் பத்திரிகைகளில் பலர் சிவராமுக்கு அதிபுனையப்பட்ட அஞ்சலிக் கட்டுரைகளை போட்டி போட்டுக் கொண்டு எழுதினர். அவர் ஒரு உன்னதமான பத்திரிகையாளராகவும், புத்திஜீவியாகவும் கட்டமைக்கப்பட்டார். இப்படி எழுதியவர்கள் விடுதலைப் புலிகளையும், புலிப்பாசிசத்தையும் அண்டிப் பிழைப்பு நடத்தும் ஊடக "யாவாரிகள்". இவர்களில் பலர் சிவராமின் உண்மை வரலாற்றை அறிந்தவர்கள் என்பது, போக கடந்த காலங்களில் சிவராமைக் கடுமையாக விமர்சித்தவர்கள். தெரிதல், காலச்சுவடு, உயிர்மை போன்ற இலக்கிய இதழ்களிலும் அஞ்சலிகள் வந்தன. இதைத் தொடர்ந்து ஆன்மீக மற்றும் சோதிட மாத இதழ்கள், மங்கையர் மஞ்சரி, அம்புலிமாமா என்பனவற்றிலும் சிவராமுக்கு அஞ்சலிகள் வரலாம் என்று எதிர்பார்த்தேன்.

ராஜ்பால் அபேயநாயக்கா சிவராமை யேசு கிறிஸ்து அளவுக்கு ஆக்காத குறைதான். ***Sunday Times*** இல் வெளிவந்த சிவராமின் அஞ்சலிக் கூட்ட அழைப்பில் சிவராமின் 'விசிறிகள்' **(fans)** எலோரும் வரலாம் என்று வெட்கமின்றி எழுதப்பட்டது. அவர் ஒரு சினிமா நட்சத்திரமாக உருவாக்கப்பட்டார். சிவராமின் அடி முதல் நுனி வரை அறிந்த நடுநிலைமையான பத்திரிகையாளரான டி.பி.எஸ் ஜெயராஜே சிவராமின் மறுபக்கங்கள் பற்றி அடக்கி வாசித்தார். ஜெயராஜ் எழுதிய நீண்ட தொடரில் புனைவுகளே அதிகம் என்பது போக, அதில் அதிகளவான தரவுப்பிழைகள் இடம் பெற்றன.

அகிலன், செல்வம் கொலையைப் பற்றி எழுதுகிற ஜெயராஜ் "எனினும் விசாரணையின் போது சிவராம் குற்றவாளி இல்லை என்று தீர்ப்பளிக்கப்பட்டதாக" புனைந்து பல்டி அடிக்கிறார். வேலிக்கு ஓணான் சாட்சி என்ற அடிப்படையில் நடத்தப்பட்ட புளட்டின் கங்காரு நீதிமன்றங்களில் ஜெயராஜுக்கு எப்போது உடன்பாடு வந்ததோ தெரியாது. தன்முயற்சியில் சற்றும் மனம் தளராத பேரா. சிவத்தம்பி, சிவராமை "நீ எத்தகைய பெரிய மனிதன்" என்று எழுதினார். மாத்தையாவினாலும், கிட்டுவினாலும் நம்பகரமற்றவர் என்று மிகச் சரியாகவே மதிப்பிடப்பட்ட சிவராம், தனது குறுகிய கால வாழ்க்கையினாலும் அதனை உறுதிப்படுத்திச் சென்றிருக்கிறார்.

- நட்சத்திரன் செவ்விந்தியன். (தேசம் சஞ்சிகை இதழ் 25 (நவம்பர் - டிசம்பர் 2005)


எம்மை மேலும் அதிர்ச்சிக்குள்ளாக்கும் விடயம் என்னவென்றால், இலங்கைக்கு புலம்பெயர் தமிழர்கள் 52,000 பில்லியன் கோடி நிதி உதவி கொடுத்து, உதவப் போவதாக வெளியான செய்திகள் பற்றியதே!.

சிங்களத் தலைமைகளை நம்பினாலும், நம்பலாம். ஆனால் இந்தியா, அமெரிக்கா, பிரித்தானிய, ஐரோப்பிய நாடுகளை நாம் எப்படிப் புனிதர்களாக நம்பி, இப்பெரும் பேரத்தைச் செய்ய முடியும். 2009 தமிழ் இன அழிப்புப் போரை யாரால் மனனிக்கவும், மறக்கவும் முடியும்? எமக்கு 1830 இல் சொந்தமாக இருந்த தாய் நிலப்பரப்பு எவ்வித சேதாரமும் இல்லாமல் கிடைத்தால் மட்டுமே எவ்வித பேரமும் செய்ய முடியும்.

அன்புச் செல்வன்

# ஏன் வேண்டும் தனித் தமிழ் ஈழம்?

எவன் பார்த்த வேலையோ, இந்தப் படம் ஒட்டுப் போட்ட ஒன்று என்பதில் சந்தேகம் கிடையாது. ஒரு பக்கத்தில் உலகமே அழிந்தாலும், கவலைப்படாமல் பாதம் பருப்பை அரைச்சு, உள்ளே தள்ளிவிடும் அரசியலைச் செய்யும் இரா.சம்பந்தன். அவரது சிங்கள உறவு வட்டாரம் தமிழ் மக்களை விடப் பலமடங்கு பெரியது.




மறுபக்கத்தில் புத்த மதப் பிரித் நூலைக் கையில் வைத்து, பக்தி சிரத்தையோடு இரு கரங்களையும் சேர்த்துப் போடும் கும்பிடுதல். இம்முறை டி.எஸ் சேனநாயக்க தொடக்கம், இன்று வரை கடைப்பிடித்து வரும் அரசியல் சாணக்கியத்தனம். இப்படியானவர்கள் கொலை வாளோடு வரும் பகைவனை விட ஆபத்தானவர்கள். உயிர் தப்ப ஓடிக் களைத்த முயலைப் போன்ற ரணிலின் முக பாவம் வஞ்சகம், சூது நிறைந்த கொடிய நச்சரவத்துக்கு நிகரானது.



The last great rebellion of Vanni (May 19th 1877 – March 14th 1878) culminating in the battle for the Arica nut trees in Thaniyutu

Courtesy of www.ezilon.com

இதுபோன்ற பல தருணங்களை எல்லாச் சிங்களத் தலைவர்களும், தமிழர் தலைமைகளுக்கு வழங்கித்தான் தமிழ் இனப் படுகொலைகளைச் செய்தும், தமிழரின் தாயகத்தைச் சூறையாடியும் கொக்கரித்த காட்சிகளை 1915 தொடக்கம் தாராளமாகக் காட்டி மகிழ்ந்தனர்.

இன்று சிங்களம் உப்புச் சிரட்டைக்கும் வழியற்று, முழிப்பிதுங்கி சாகும் நிலையில் நிற்கிறது. அந்த வலியைத்தான் ரணிலின் முகபாவம் அப்பட்டமாகக் காட்டி நிற்கிறது.முழு இலங்கையும் தமிழரின் தாயகப் பூமியான வட வேங்கடம், தென்குமரி , மேற்கே அரபிக் கடல், கிழக்கே வங்கக் கடலை எல்லையாக தொல்காப்பிய பாயிரம் குறிப்பிட்ட தமிழரின் தமிழ் கூறும் நல்லுலகம்.




2,500 வருடங்களுக்கு முன்னர் கப்பல்களில் வந்திறங்கிய விஜயனும், கொள்ளைக் கூட்டமும் வந்து கபடமாக எமது மண்ணைப் பறிக்கும் வரை, முழு இலங்கையும் தமிழர் தாயகமாக இருந்தது. இதன் பின்னரும் ஆங்கிலேயர் தமிழரின் வன்னிமைச் சிற்றரசுகளை வெற்றி கொண்ட வேளையிலும், தமிழரின் தாயக மண் தமிழர்களின் வன்னிமைச் சிற்றரசுகளாகவும், தன்னாதிகார உரிமை கொண்ட அரசுகளாகவும் இருந்துள்ளன. அதற்கு ஆதாரமான நிலவரைப் படத்தை இங்கே தருகிறோம்.



தமிழ் மன்னன் பண்டார வன்னியன் ஆட்சியைக் கைப்பற்றிய ஆங்கிலேய ஆட்சியாளர், சிங்களத் தலைமைகளின் அடியாட்களாக மாறித் தமிழர் நிலத்தைச் சிங்களவர் நிலங்களாக மாற்றி, தமிழ் மக்களுக்குத் துரோகம் இழைத்தனர். புத்தளம், நீர்கொழும்பு, சிலாபம், கந்தளை, வத்தளை உட்பட தமிழரின் நில அபகரிப்பும், சிங்கள மயமாக்கலும் திட்டமிட்டே அரங்கேற்றப் பட்டன. இவற்றை எல்லாம் மீட்கப்படாத எந்த ஒரு தீர்வை யார் முன்வைத்தாலும், அதனை நிராகரிக்கும் தன்மானமும், தினாவெட்டும் உள்ள தமிழர் தலைமையை நாம் உருவாக்க வேண்டும்.

**Smt. லிதியா மயூரன்,** சுவிஸ்



இந்த மாத அகரம் இதழில் அடவு மற்றும் ஹஸ்தம் பற்றிப் பார்க்க இருக்கிறோம்.


## அடவு

அடவு என்பது, ஆடப்படும் கலைகளுக்கு ஜீவநாடி போன்றது. இது ஆடல் எனும் வேர்ச்சொல்லை கொண்டது. அடைவுகளுக்கு உருவம் கொடுப்பது ஸ்தானகம், சாரி, நிறுத்த ஹஸ்தம். உடலின் நிலைகளை ஸ்தானம் என்றும், காலின் அசைவை சாரி என்றும், கைகளின் அசைவை நிறுத்த ஹஸ்தம் என்றும் கூறுவர். 'அடவு' என்ற சொல்லே சம்ஸ்கிருதத்தில் கரணம் என அழைக்கப் படுகிறது.

அதாவது ஸ்தானம், சாரி, நிருதஹஸ்தம், கண் அசைவு, தலை அசைவு, கழுத்தசைவுகள் யாவும் ஒருங்கே ஒரே நேரத்தில் இணைந்து, தாளத்துக்கு ஏற்ப வருவது அடவு எனப்படும். அடைவுகளைக் குரு மூலமாகப் பயில வேண்டும். அங்க சுத்தத்தோடு, அடைவின் வடிவத்தை மாற்றாமல், மூன்று காலத்திலும் பயில வேண்டும்.

## ஜதி

ஜதி கருத்தற்றத் தூய்மையான சொல்லே 'ஜதி' எனப்படும். இவை அனேகமான மிருதங்க சொற்றகட்டுகளாக இருக்கும். இறைவன் தாண்டவம் ஆடியபோது ஜதிகள் தோன்றின என்றும், சிவனின் தற்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம், ஈசானம் ஆகிய பஞ்ச முகத்தினின்றும் முறையே தா- தீ - தோம் - நம் - ஜம் எனும் ஐந்து ஜதிகளும், அவரின் கையிலிருந்து டமருகத்திலிருந்து உபஜதிகளும் தோன்றியதாக ஐதீகம். தாளத்தின் அளவிற்குள் அழகுடன் பொருந்திய சொற்களை வெளிப்படுத்தும் போது 'ஜதி'






எனப் பெயர் பெறுகின்றது. இவற்றிற்கு 'சொற்கட்டு' என்றும் பெயர்.

### அசம்யுத ஹஸ்தஸ் (ஒரு கை சைகை)

பரதநாட்டியத்தில் பயன்படுத்தப்படும் வெவ்வேறு கை அசைவுகளைப் பற்றி பார்ப்போம். ஹஸ்தங்கள் / முத்ராக்கள் (கை சைகைகள்) முதன்மையாக 28 அசம்யுத ஹஸ்தங்கள் (ஒரு கை சைகை) மற்றும் 24 சம்யுத ஹஸ்தங்கள் (இரண்டு கை சைகைகள்) என வகைப்படுத்தப் பட்டுள்ளன. பல்வேறு எண்ணங்கள், யோசனைகள் மற்றும் பொருள்களைக் குறிக்க ஒவ்வொரு ஹஸ்தாகளையும் பயன்படுத்தப்படலாம். ஹஸ்தாகளின் பயன்பாட்டைக் கணக்கிடும் பண்டைய நூல்களில் பல்வேறு ஸ்லோகங்கள் (வசனம்) உள்ளன. இவை வினியோக ஸ்லோகங்கள் எனப்படும். பரிந்துரைக்கப் பட்ட வினியோகங்களைத் தவிர, நடனக் கலைஞர், பார்வையாளர்களுக்குப் பொருத்தமான செய்தியைத் தெரிவிக்க, தேவைப் பட்டால், புதுமைகளை உருவாக்கலாம்.

**அடுத்த அகரம் இதழில் அசம்யுத ஹஸ்தங்களின் வினியோகம் பற்றி பார்ப்போம்.**



பாகம் : 27

ஆய்வாளர் சேது, அமெரிக்கா



# தமிழீழ விடுதலைப் போரும், கற்றுக்கொண்ட பாடங்களும்

## எதிரிகளிடம் கற்றல்

எதிரியைத் தோற்கடிக்க ஓர் எளிதான உத்தி என்பது, எதிரி என்ன செய்கிறானோ, அதனைக் கற்றுச் சிறப்பாக்கி, அதை எதிரியின் மீதே திருப்புவதுதான். இதைத்தான் தோற்ற ஒவ்வொரு நாடும் செய்கின்றன. இது வரலாற்றில் தொன்று தொற்று நடப்பது. எதிரியிடம் சிறப்பானதைக் கற்காமல், ஒரு நாடு எதிரியை விஞ்ச முடியாது.

1. அமெரிக்க உள்நாட்டுப் போரில் தோற்ற தெற்கு, தோல்விக்கு முக்கிய காரணமாகக் கருதியது அதன் பொருளாதார வலிமையின்மை. அதனால் வடக்கிடமிருந்து தொழிற்புரட்சியைக் கற்று, தெற்கிற்குக் கொண்டு வந்தது.

2. பிரான்சு, யேர்மனியிடம் தோற்றதற்கு யேர்மனியின் பொதுக் கல்விமுறையும், படிப்பறிவுள்ளப் படைவீரர்கள் என்றும் கண்டறிந்தது. அதனால் அவர்களின் பொதுக்கல்வி முறையைப் பிரான்சு நகலெடுத்தது.

3. யேர்மனி முதல் உலகப்போரில் தோற்றபின், தன்னை வென்ற அமெரிக்காவின் தொழில் உற்பத்தித் திறனை வியந்து, அதனைக் கற்று, உற்பத்திப் புரட்சியை உருவாக்கியது.

4. இங்கிலாந்திடம் தோற்ற காட்லாந்து, இங்கிலாந்தின் அறிவொளிக் காலத்தை நகலெடுத்து, தனக்கென ஒரு அறிவொளிக் காலத்தை உருவாக்கியது. நவீன உலகின் பொருளாதாரத் தந்தை எனக்கூறப்படும் ஆடம் சுமித்து அதில் உருவானவர்தான்.

5. பிரான்சுக்கும், இங்கிலாந்துக்கும் இடையே நடந்த போர்களில் எப்பொழுதெல்லாம் பிரான்சு தோற்றதோ, அப்பொழுதெல்லாம் ஆங்கிலேய மோகம் பிரான்சில் தொற்றிக் கொண்டது.

*6.* அமெரிக்கா, சப்பானை கடற்படை கொண்டு மிரட்டிய பின்னர், எங்கே சப்பான் மேற்குலகிற்கு அடிமையாகி விடுமோ எனப் பயந்து, மேற்குலகை நகலெடுத்து, சப்பான் தன்னை நவீனப்படுத்தி, ஆசியாவிலே வல்லரசாகியது.

*7.* சிங்களம் இறுதிப்போரில் மேற்குலகின் கற்பித்தலில் புலிகளை நகலெடுத்தார்கள். அவர்கள் புலிகளைப் போன்று திட்டமிடாமல், வாய்ப்பு கிடைக்கும் இடத்தில் எல்லாம் போர் தொடுத்தார்கள், ஆழ ஊடுருவும் படைகள், களைப்பறித்தல், நீர் பாய்ச்சுதல் என முழுதாக நகலெடுத்தார்கள்.

ஒரு தேசம் எதிரியிடம் நகலெடுப்பதில் ஒன்றில் மிகத் தெளிவாக இருக்கும். தனது பண்பாடு, ஆன்மா ஆகியவற்றை நகலெடுக்காது. ஏனெனில் அவை அடையாளம். அவற்றை அழித்தால் தேசம் தன்னையே அழிப்பது போன்றது. எதுவெல்லாம் தன்னை வலுப்படுத்தும் கருவிகளாக இருக்குமோ, அவற்றை மட்டுமே நகலெடுக்கும். ஒரு தேசம் தனது பண்பாடு மோசமானது, அதை மாற்றவேண்டும் என்றால், அதற்கான மாற்றத்திற்கானப் பாடங்களைத் தனது வரலாற்றிலேயே தேடும். அடிப்படையில் மீளெழுச்சி என்பது இந்த இருவகை கற்றல்கள் / நகலெடுப்புகள் மூலம் ஏற்படுகிறது.

*1.* பண்பாடு சார்ந்த அடையாள மாற்றங்கள், தனது பழைய வரலாற்றிலிருந்து கற்றுக் கொள்கிறது.

*2.* வலுப்படுத்தும் உத்திகளை, சாதனங்களை எதிரிகளிடம் இருந்தும், மற்றவர்களிடம் இருந்தும் கற்றுக் கொள்கிறது.

இன்று நமது பின்னடைவுக்குப் பின்னரான காலத்தில் நமது எதிரிகளான சிங்களத்திடம் இருந்தும், இந்துத்வாவிடம் இருந்தும் என்ன கற்றிருக்கிறோம்? என்ற கேள்வி முக்கியமானது. எனக்கு இதுவரை நாம் எதுவும் கற்றதாகத் தெரியவில்லை. மற்ற நாடுகள் எல்லாம் எதிரிகளிடம் பாய்ந்து வேகமாகக் கற்கும் பொழுது, நாம் ஏன் செய்யவில்லை? என்பது உண்மையிலே ஒரு புதிராகவே இருக்கிறது. எனக்குத் தோன்றும் இரு காரணங்கள் :

*1.* எதிரியிடம் கற்பது, அவமானம் என்று நினைக்கலாம்.

*2.* பள்ளிகளில் மற்றவரைப் பார்த்து நகலெடுப்பது குற்றம் எனக் கற்பிக்கப் படுகிறது. அதனால் எதிரிகளைப் பார்த்து நகலெடுப்பது ஏதோ குற்றம் போன்று நினைக்கலாம்.

எதிரிகளுடனானப் போட்டியில் நகலெடுப்பது என்பது அவமானமல்ல, அது கற்றல் என்ற உயர்ந்த செயல். அதன் நோக்கம் எதிரியைப் புகழ்வதல்ல, எதிரியைக் காலி செய்வதே!. நாம் என்னென்ன எதிரிகளிடம் இருந்தும், மற்ற நாடுகளில் இருந்தும் கற்கவேண்டும் என்பதை, அடுத்தப் பகுதியில் விரிவாகப் பார்ப்போம்.

ஒரு பாரிய பின்னடைவிற்குப் பின்னர், உலக நாடுகள் எவ்வாறு மீளெழுகின்றன? என்பதை நமது வரலாற்றுடன் ஒப்பிடும்பொழுது, நாம் இன்னும் ஆரம்ப கட்ட கனவு நிலையிலும், நீதி கேட்கும் நிலையிலும் இருக்கிறோம். பின்னடைவு அடைந்த நாடுகளின் அதிமுக்கியமான செயல்பாடுகள் என்பது கற்றலும், புதுப்பித்தலும்தான். இவை இரண்டைப் பற்றியும் எந்த ஒரு திட்டவட்டமான செயற்பாடுகளும் நம்மிடம் இல்லை. மேலும் நாம் பண்பாட்டில் உயர்ந்திருக்கிறோமா? நமது ஆன்ம பலத்தை வலுப்படுத்தி இருக்கிறோமா? என்பது நாம் கேட்க வேண்டிய கேள்விகள்.

இதுவரையான நமது செயற்பாடுகள் எல்லாம் இழப்புகளினால் உருவாகும் இயற்கையான உளவியல் உந்துதலினால் ஏற்பட்டவை. நமது புதுப்பித்தலும், கற்றலும் உணர்வுகளைத் தாண்டி வரலாற்றைக் கற்று, ஆழமான பகுத்தறிந்து உருவாக்கும் செயல்பாடுகளினால் மட்டுமே அமையும். அதை நோக்கி நாம் நகர வேண்டியது இன்றைய தேவை.

தமிழ்ச் சமூகத்தில் மட்டும் நடக்கும்



ஒரு விசித்திரமான விடயம் என்னவென்றால், அதிகம் படிக்காதவர்களுக்கு நமக்கு ஏன் ஒரு நாடு வேண்டும்? என்பது அவர்களுக்கு சொல்லாமலே புரிகிறது. ஆனால் அதிகம் படித்த பெரும்பான்மையானவர்களுக்கு எவ்வளவு சொன்னாலும் புரிவதில்லை. அவர்களுக்குப் புலிகளின் போராட்டத்திற்கான நியாயப் பாட்டையும் புரிந்துகொள்ள முடிவதில்லை. இக்கட்டுரையின் நோக்கம் என்பது நாம் ஒரு இனமாக நமது இருப்பைத் தக்க வைக்க தேசியத்தின் அடிப்படை முக்கியத்துவத்தையும், தேவையையும் விளக்குவதே!. இதற்கு சான் மேர்சைமர் ***(John Mearsheimer)*** மற்றும் சுடீபன் வால்ட்டு ***(Stephen Walt)*** ஆகியோரின் ஆய்வுகளைப் பயன்படுத்துகிறேன்.

**ஏன் தேசியம்?**

*1.* தேசியம்தான் உலகில் ஆற்றல் வாய்ந்தது.

இவ்வுலகில் அதிக ஆற்றல் கொண்டது அணுகுண்டுகளோ, இணையமோ, கம்யூனிசமோ, முதலாளித்துவமோ, மதமோ, அல்லது கடவுளோ கிடையாது. இன்றைய உலகில் ஆற்றல் வாய்ந்தது தேசியமே!. ஒரு பொதுவான மொழி, பண்பாடு கொண்ட மக்கள் தங்களைத் தாங்களே ஆளும் உரிமை கொண்டவர்கள் என்ற எண்ணம்தான் தேசியம். இந்தத் தத்துவம்தான் கடந்த 500 வருட உலக வரலாற்றைத் தீர்மானித்திருக்கிறது, இன்றும் தொடர்ந்து ஆற்றல் வாய்ந்ததாக இருக்கிறது என்பதை இன்னும் பலர் உணர்வதில்லை.

இன்று ஐரோப்பிய யூனியனிலிருந்து பிரிட்டன் வெளியேறியதற்கான காரணம் தேசியம்தான். அதுபோல அமெரிக்காவின் திரம்பு “அமெரிக்காவை மீண்டும் உயர்த்துவோம்” என்றதும், சீனாவை மீண்டும் உலகின் தலைமையாக்குவோம் என்ற அவர்களின் குறிக்கோள்களும், மேலும் ஐரோப்பிய நாடுகளில் தோன்றியிருக்கிற வலது சாரி இயக்கங்களுக்கும் அடிப்படை தேசியமே!. நமது ஈழ விடுதலைப் போராட்டத்திற்கும், இனவழிப்பிற்கும் காரணம் நம்மை அடிமைப்படுத்தி, அழிக்க நினைக்கும் சிங்கள தேசியம்தான்.

இந்தியாவில் தீவிர இந்தி மற்றும் இந்துமத திணிப்பிற்கும், இனக்கலவரங்களுக்கும் பின்னால் இருப்பது இந்துத்துவ தேசியமே!. இன்றைய நமது பெரும்பாலான சிக்கல்கள்

எல்லாம் தேசியம் சார்ந்து உருவாகியதே!. இதைச் சரியாக நாம் எதிர்கொள்ளவில்லை என்றால், நாம் ஒரு இனமாக நமது இருப்பைத் தக்கவைக்க முடியாது. மற்ற இனங்களில் கரைந்து, தமிழினம் என்பது இல்லாமல் போகும். அதற்கு 50-100 வருடங்கள் பிடிக்கும். ஆனால், இன்றைய நிலை தொடர்ந்தால் அழிவு உறுதியானது. இதை நான் பயமுறுத்துவதற்காகக் கூறவில்லை. இதுதான் நிதர்சனம், வரலாறு கூறும் பாடம்.

**ஏன் தேசியம் முக்கியமானது?**

உலகிலுள்ள நாடுகளுக்கிடையே நீதியை ஏற்படுத்த எந்த காவல்துறையும், நீதிபதியும் இல்லை (ஐநா என்பது தரகு அமைப்பு). அதனால் நாடுகள் தங்களது வலிமையினால் மட்டுமே தங்களது உரிமைகளைத் தக்கவைக்க முடியும். இதன் விளைவாக ஒவ்வொரு நாடும் மற்ற நாடுகளுடன் போட்டியில், பனிப்போரிலே இருக்கிறது. அது எப்பொழுது வேண்டுமானாலும் போராக வெடிக்கலாம். அவ்வாறான போட்டிகளில் ஒரு நாடு வெல்ல வேண்டுமானால், நாட்டு மக்கள் ஒற்றுமையாகவும், நாட்டுக்குத் தியாகம் செய்யவும் தயாராக இருக்க வேண்டும்.

அவ்வாறான ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான அழுத்தத்திலேயே ஒவ்வொரு நாடும் இருக்கின்றன. அதனால் ஒவ்வொரு நாடும் தனது மக்களிடையே ஒரே மொழி, பண்பாடு கொண்ட ஒரு தேசிய இன மக்களாக மாற்ற முனைகிறது. உதாரணமாக இந்து, இந்தி, இந்தியா என்ற ஒற்றை தேசியமாக இந்துத்துவா அமைப்புகள் இந்திய நாட்டை கட்டமைக்க முனைகின்றன. அதேபோல சிங்கள நாடு, இலங்கைத் தீவில் தமிழ்த் தேசியம் இருப்பதை அச்சுறுத்தலாகப் பார்க்கிறது. இலங்கை நாட்டை சிங்கள பௌத்த தேசிய நாடாக மாற்றுவதுதான் அவர்களின் இலக்கு.

அடிப்படையில் ஒரு நாடு என்பது பன்மைத் துவத்தை அழித்து, ஒற்றை மொழி பண்பாடு கொண்ட மக்களாக மாறுவதை நோக்கியே செயல்படுகின்றன.





கொண்ட மக்களாக மாற்றி, தேசியத்தை வளர்த்து, தன்னை அழியாமல் பாதுகாக்க முனைகிறது. தனி நாடு கேட்கும் மக்களை அடக்கி ஒடுக்குகிறது, நாட்டை விட்டு விரட்டி அடிக்கிறது, இனவழிப்பு செய்கிறது. மக்களை அடைத்து பாடம் எடுக்கிறது (உதாரணம் : சீனா).

நாம் இதுபோன்ற நிலையில் சிக்கி இருக்கிறோம். நாம் அடைப்பட்டிருக்கும் நாடுகளின் இறுதி இலக்கு என்பது, நமது அடையாளங்களை அழித்து, அவர்களைப் போன்று நம்மை மாற்றுவதே!. எந்த நாடும் இதை வெளியில் சொல்லாது. ஆனால் அதுதான் அவற்றின் நோக்கம். ஏனென்றால் ஒரு நாடாக பிழைக்க வேண்டுமானால் இதைச் செய்துதான் ஆக வேண்டும். இல்லையென்றால் அந்நாடு காலப்போக்கில் சிதறி அழிந்துவிடும்.

உதாரணமாக 200 ஆண்டுகளுக்கு முன்பு பிரான்சு நாட்டில் பிரஞ்சு மொழி என்பது, சிறுபான்மை மொழி. காலப்போக்கில் மற்ற மொழிகளை எல்லாம் அழித்து, பிரான்சு என்ற ஒற்றை மொழி கொண்ட நாடு உருவானது. இதுதான் ஒவ்வொரு நாட்டின் இலக்கு. இந்தியாவும் அதை நோக்கியே நகருகிறது.

அதனால் தனித்த மொழியும், பண்பாடும் கொண்ட மக்கள், தங்களுக்கென்று ஒரு நாட்டை அமைக்கா விட்டால், அவர்கள் மற்றவர்களுக்கு அடிமைப்பட்டு, உள்ளிழுக்கப்பட்டு கரைந்துக் காணாமல் போவார்கள். இதனால்தான் தங்களைக் காத்துக்கொள்ள நாடில்லாத பல தேசியங்கள் நாட்டை அமைக்கப் போராடுகிறார்கள். அவர்களை ஆக்கிரமித்துள்ள நாடுகள் அவர்களை அடக்கி ஒடுக்குகிறது, இனவழிப்பு செய்கிறது. இன்று குர்து, பாலசுதீன, தமிழ் மக்கள் இதற்கு சிறந்த உதாரணங்கள் என்கிறார் சுடீபன் வால்ட்டு.

சுருக்கமாக தேசியம் இருவிளைவுகளை உலகில் ஏற்படுத்துகிறது. 1.ஒவ்வொரு தேச மக்களும் தங்களுக்கான நாட்டை உருவாக்க முனைகின்றனர். 2.ஒவ்வொரு நாடும் மக்களை ஒரே மொழி, பண்பாடு

தேசியம் என்பது நவீன உலகின் தத்துவம், மேற்குலகின் மூலம் இந்தியத் துணைக் கண்டத்திற்கு வந்தது. இந்தியாவில் முன்பு பல்வேறு இன, மொழி, மத மக்கள் சிக்கலின்றி வாழ்ந்தார்கள். அரசர்களும் அரசுகளும் மாறும். ஆனால் மக்களின் மொழிகள் அடையாளங்கள் அழியவில்லை. ஆனால் தேசியம் வந்த பின்புதான் இனங்களுக்கு இடையேயான பகை என்பது அசுர உருவம் எடுத்தது.

இந்தியப் பிரிவினையின் போது 10 இலட்சம் பேர் இறந்தார்கள், பலகோடி பேர் இடம்பெயர்ந்தார்கள். இன்றும் அது பெரும் பகையாக இருக்கிறது. அதேபோல இலங்கைத் தீவில் தமிழர்களும், சிங்களவர்களும் நட்புடன் இருந்தார்கள். ஆனால் தேசியம் வந்தபிறகு இனப்படுகொலையில் வந்து நிற்கிறது. இதுபோன்ற நிகழ்வுகள் உலகெங்கும் நடந்திருக்கின்றன, தொடர்ந்து நடக்கின்றன.

தொடரும்...



SK
SINCE 2003
S.K. Silks &
Gold Paradise
வாடிக்கையாளர்களின்
பேராதரவுடன்
20ஆம் ஆண்டில்....
30%
50%
ஆடித் தள்ளுபடி
மாபெரும்
ராஜ
முத்திரை
ADLER STR. 33, 44137
DORTMUND
Tel : 0231 9501647
Fax : 0231 9501648



# உளவு நிறுவனங்கள்

உளவு நிறுவனங்களின் வலைப்பின்னல் உலகநாடுகள் எங்கும் படிப்படியாக வியாபித்திருப்பதை மறுக்க முடியாது. குறிப்பாக ஐரோப்பிய நாடுகள் எங்கினும் பலம்பொருந்திய நாடுகளின் உளவு நிறுவனங்கள், மக்களோடு மக்களாக வியாபித்து நின்று, அந்தந்த நாடுகளின் கட்டமைப்பு இரகசியங்கள் அனைத்தையும் உறிஞ்சி எடுத்து வருகின்றன. அதற்கு எதிராக இந்நாடுகள் பெரும் நிதியை ஒதுக்கி, உளவு பார்ப்பவர்களை உளவு பார்க்க வேண்டிய பாரிய வேலையைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஒவ்வொரு நாடுகளிலும் இருந்து உளவு நிறுவனங்கள் இன்னொரு நாட்டுக்குள் நுழைந்து விடுகின்றன. இந்திய உளவு நிறுவனமான ‘றோ’ இலங்கையில் மட்டுமே நிலை கொண்டிருக்கின்றது என்று நம்புவோமானால், அது முற்றிலும் தவறு. இந்தியத் தூதரகங்கள் எந்தெந்த நாடுகளில் இருக்கின்றனவோ, அந்தந்த நாடுகளில் தூததரகங்களில் ஒரு பகுதியாக இந்திய உளவு நிறுவனம் செயல்பட்டுக் கொண்டேதான் இருக்கின்றன. உலக நாடுகளின் உளவு நிறுவனங்கள் அந்தந்த நாடுகளின் தூதரகங்களின் ஒரு பகுதியாகவே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இன்னும் குறிப்பாக இந்திய தூதரகங்கள் இல்லாத நாடுகளில் அதிலும் குறிப்பாக மக்கள் வாழ்கின்ற சிறு சிறுத் தீவுகளில் கூட இந்திய உளவு நிறுவனம், அங்குள்ள தொழிற்சாலைகள், வணிக நிறுவனங்கள் ஊடாக இயங்குகின்றன. தொழிற்சாலைகளினதும் அல்லது வணிக நிறுவனங்களினதும் அதிகாரிகள் அவை சார்ந்த அதிகாரிகளாக பொதுவாகத் தோற்றப்படினும், அவர்கள் உளவு நிறுவன ஒற்றர்களாகவும் பணி செய்கிறார்கள். இது இந்திய உளவு நிறுவனத்திற்கான உதாரணம் மட்டுமல்ல, பலம்பொருந்திய நாடுகளின் அனைத்து உளவு நிறுவனங்களும் இவ்வழியிலும் செயல்படுகின்றன.

சில நாடுகளில் அபரிதமான கனிம வளங்கள் மண்ணுக்கு கீழ் இருக்கின்றன. இவை புதிய புதிய கருவிகளின் உற்பத்திக்கு

அதிமுக்கிய தேவையாக இருக்கும் பட்சத்தில், நவீன தொழில்நுட்ப வசதியுள்ள கருவிகளைக் கொண்டுள்ள இத்தகு நாடுகள், பொருளாதாரக் கட்டமைப்பைச் சரிவரக் கையாளத் தெரியாமையால் தத்தளித்து, வறுமை நிலைக்குட்படுகையில் அந்நாடுகளில் உள்ள கனிம வளங்களை எடுப்பதன் மூலம் அந்நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தலாம் என்பதற்கமைய உதவி செய்யும் நாடுகளே, இத்தொழி நுட்பவியாளர்களுடன் உளவு பார்க்கும் ஒற்றர்களையும் பணியமர்த்துகின்றது.

இவர்கள் தொழில்நுட்ப துறைசார் அறிவியலாளர்களாகவும், விஞ்ஞானிகளாகவும் இருந்தாலும்கூட, தனது நாட்டுக்கு ஒற்றர்களாக வேலை பார்ப்பதில் அவர்கள் தமது நாடு உலக நாடுகளின் வரிசையில் முன்னணியில் நிற்க வேண்டுமென்பதற்காக தகவல் சேகரிக்கும் ஒற்றர்களாகப் பணிபுரிவார்கள்.

கனிம வளங்களை எடுப்பதன் மூலம், அவற்றால் அந்நாடு பொருளாதாரத்தில் முன்னேறுகிறது என்று ஒருவழி தென்பட்டாலும், அக்கனிம வளங்கள் சூறையாடப்படுவதற்கு வணிகம் என்று பெயரிடப்படுகின்றது என்பதும் உண்மையே!. கனிமவளத் தொழிற்சாலைகளில் துறைசார் தொழில் நுட்பவியலாளரர்களாகவும், விஞ்ஞானிகளாகவும் அதே வேளை ஒற்றர்களாகவும் வேலை செய்வோர் அரிதான மிகப் பெறுமதியான கனிம வளங்களைத் தன்னகத்தே கொண்டிருக்கும் நாடுகள் முன்னேறிவிடக் கூடாதென்பதிலும், தொடர்ந்தும் அவை வறிய நாடாகவே இருந்து வரவேண்டுமென்பதிலும் தீவிர அக்கறையுடன் இருப்பார்கள்.

தத்தமது நாடு முன்னணியில் இருக்க வேண்டுமென்பதற்கு, இத்தகு இரட்டைப் பணி பெரும் பங்கையாற்றி வருகின்றது. நாடுகள் தமக்குள் ஒன்றுக்கொன்று உதவி செய்வது போல உலகநாடுகளின் உளவு நிறுவனங்கள் ஒன்றுக்கொன்று உதவி செய்தும் வருகின்றன.

உதாரணமாக ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்த ஐரோப்பிய நாடுகளில் அவர்கள் தமது தனிநாட்டுக் கொள்கைக்கு அவர்களிடமிருந்து எத்தகு உதவி கிடைக்கின்றன. அதற்கான அவர்களின் நிர்வாக வலைப்பின்னல் எவ்வாறானது? அனைவருமே கொள்கைக்குச் சார்பானவர்களா? அவர்களில் அக்கோரிக்கையை ஏற்றுக் கொள்ளாதவர்களும் இருக்கிறார்களா? என்பன போன்றவற்றுடன் இக்கொள்கைக்குச் சார்பான ஊடகங்கள் அமைப்புக்கள் போன்றவற்றின் விபரங்களை வழங்குவதற்காகப் புலம்பெயர் நாடுகளில் இயங்குகின்ற அந்தந்த நாட்டு புலனாய்வுப் பிரிவினரை இந்திய உளவு நிறுவனம் அணுகுவதும், அந்தந்த நாட்டுப் புலனாய்வுப் பிரிவினர் இந்திய உளவு நிறுவனத்துக்கு இரகசியங்களை வழங்குவதுடன் இலங்கை அரசுக்கும் வழங்கிக் கொண்டே இருப்பார்கள்.

இத்தகவல் அளிப்பது என்பது இயல்பானதே!. புலம்பெயர் நாடுகளில் பேரணிகள் நடத்தவும், தமிழர் சார்ந்த சனநாயக வழி அமைப்புகளை நடத்துவதற்கும், தமது உரிமைப் பிரச்சினைகளைத் தமது மக்களுக்குச் சொல்வதற்காக ஊடகங்களை நடத்துவதற்கும் அனுமதி அளிக்கும் புலம்பெயர் ஈழத்தமிழர்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் ஐரோப்பிய நாடுகள், அதே வேளை ஈழத்தமிழரின் நடவடிக்கைகளைக் கண்காணித்து, அதனை இந்தியா, இலங்கை, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு அறிவித்துக் கொண்டேயிருக்கும். இது ஒரு நாட்டின் தனித்துவமான இரகசியமான செயல்பாடாகும்.

இதுமட்டுமல்லாது, இந்த நாடுகளில் இயங்குகின்ற குறிப்பாக ரஸ்யாவின் உளவு நிறுவனம், அமெரிக்க உளவு நிறுவனம், சீன உளவு நிறுவனம், இஸ்ரேல் உளவு நிறுவனம் போன்றவையும் புலம்பெயர் ஐரோப்பிய நாடுகளில் ஈழத்தமிழர்களின்

நடவடிக்கைகள் என்னென்னவென ஒற்றர்கள் மூலம் அறிந்து கொண்டேயிருக்கும்.

அந்தந்த நாடுகளின் காவல்துறையினர் பேரணி காலங்களில் பாதுகாப்பு வழங்கும் போதே செயல்பாட்டாளர்களுடன் இயல்பாக பேசுவது போலப் பேசியும், உங்கள் நடவடிக்கைகள் நியாயமானது சனநாயக முறைக்குட்பட்டது எனச் சொல்வதன் மூலமாகவும் ஈழத்தமிழர்களின் நம்பிக்கையைப் பெற்றுக் கொண்டு ஈழத்தமிழர்கள் அடுத்தடுத்து என்ன நடவடிக்கைகளை எடுக்கப் போகிறார்கள் என்ற இரகசியங்களை அறிந்து கொள்வார்கள்.

இவ்வறிந்து கொள்ளலுக்காக தனிநாட்டுக் கொள்கைக்கு ஆதரவானவர்களுடனும், அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்களுடனும் காவல்துறை உட்பட புலனாய்வுப் பிரிவினர் இயல்பு நிலையிலே நடந்து கொள்வார்கள். இது உளவு நிறுவனங்களின் அணுகுமுறைகளில் ஒன்று.

தனிநாட்டுக் கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் ஈழத்தமிழர்கள், தமக்குள் அணிதிரண்டும் தனித்தும் தனிநாட்டுக் கொள்கைக்கு ஆதரவானவர்களிடமிருந்து இரகசியத் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக, தமது ஒற்றர்களை ஆதரவு அமைப்புக்களில் அங்கத்தவர்களாக இணையச் செய்து, தனிநாட்டுக் கொள்கைக்கோ அல்லது அரசியல் நடவடிக்கைக்கோ தீவிரமான ஆதரவாளர்கள் என்பது போல நடித்து, அனைத்து இரகசியங்களைப் பெற்றுக் கொள்வதுடன், அமைப்புகளுக்குள் ஊடுருவிய இத்தகையவர்கள் அடுத்தடுத்து என்னென்ன செய்ய வேண்டுமென்பதற்கான ஆலோசனைகளையும் வழங்குவார்கள்.

இவர்கள் இந்தியாவுக்காகவும், இலங்கைக்காகவும், புலம்பெயர் புலனாய்வுப் பிரிவினருக்காகவும் இயங்குகிறார்கள் என்பதை அறிந்து கொள்ள முடியாதவாறு, தாம் இனமான உணர்வுள்ளவர்கள் போலவும், விசுவாசிகள் போலவும் நடித்துக் கொள்வார்கள். இவ்வாறானவர்கள் எவ்வாறு ஈழத்தமிழரின் அமைப்புகளுக்குள்ளும், ஊடகங்களுக்குள்ளும் ஊடுருவ வேண்டுமென்பதற்கான பயிற்சிகளைப் பெற்றிருப்பார்கள்.

ஈழத்தமிழரின் அறிக்கைகளைவிட, ஊடகங்கள் மூலமாக விடும் செய்திகளைவிட, ஈழத்தமிழரின் அமைப்புகளில் அங்கம் வகிப்பவர்கள் தொலைபேசி வாயிலாகவும், உரையாடல் வாயிலாகவும் ஒருவருக்கொருவர் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதை ஈழத்தமிழ் ஒற்றர்கள் கதைகேட்பவர்களாகவும், தொலைபேசி உரையாடல் வாயிலாகவும் அறிந்து கொள்வார்கள்.

அதே வேளை யார், யார் ஈழத்தமிழர்களின் அமைப்புகளின் பொறுப்பாளர்கள்? ஊடகங்களின் பொறுப்பாளர்கள்? என்பதை, ஈழத்தமிழ் ஒற்றர்களே ஐரோப்பிய நாடுகளின் புலனாய்வுப் பிரிவினருக்குச் சொல்வதன் மூலம், அந்தந்த நாட்டுப் புலனாய்வு இரகசிய திணைக்களம் தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக் கேட்பதும், அதனை மொழிபெயர்ப்பாளர்களைக் கொண்டு மொழி பெயர்த்தும் அறிந்து கொள்வார்கள். இரகசியத் தகவல்களைக் கொடுக்கும் ஈழத்தமிழ் ஒற்றர்களே மொழிபெயர்ப்பாளர்களாகவும் செயல்படுவதும் உண்டு.

புலம்பெயர் ஈழத்தமிழ் ஒற்றர்களைப் புலனாய்வுப் பிரிவினர் கண்காணித்து, அவர்கள் இருப் பக்கமும் இரகசியங்களைக் காவுகிறார்களா? இல்லையா? என்பதற்குக் கூட ஒற்றர்களை நியமித்து, அவர்கள் மூலமாக உன்னிப்பாகக் கவனித்து, புலம்பெயர் ஈழத்தமிழ் ஒற்றர்கள் நூறு வீதம் நம்பத் தகுந்தவர்களாகவும், இரகசியங்களை எந்தச் சூழ்நிலையிலும் கசியவிட மாட்டர்கள் என்பதற்குப் பிறகு, அவர்களுக்கு நிதி உதவிகளைச் செய்யத் தொடங்குவார்கள்.

**(தொடரும்)**


DORTMUND மாநகரத்திலே
தாயக மரக்கறிகள், பழ வகைகள் மற்றும்
உணவுப்பொருட்களை மொத்தமாக
பெற்றுக்கொள்ள நாடுங்கள்
StaR-Impex
பொருட்களை
ஜேர்மனியில்
மொத்தமாக
விநியோகம்
செய்யும்
ஒரே நிறுவனம்
Bringing Health to Life
Lebensmittel Grosshandel e.K.
Franziustr.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231 / 8602696 Fax : 0231 / 8602698
email : info@star-impex.de
web : www.star-impex.net

**Radio - by - Phone**

18 ஆம் ஆண்டில்....

ETR

ஐரோப்பிய தமிழ் வானொலி

அழையுங்கள்! வானொலியைக் கேட்டு மகிழுங்கள்..!!

# 00 4934 5483411998

தொலைபேசி இலக்கத்தில்

## ஐரோப்பியத் தமிழ் வானொலி

நேரடி நிகழ்ச்சிகளில் பங்குபெற
அழையுங்கள்
**00 49 231 700 977 60**

மேலதீக விபரங்களுக்கு...
**www.etr.fm**

மகிழ்வுடன்.... அகரம் | அகர தீபம் | ETR NEWS | ETR Music

தேவன்

சிநொடிப் பொழுதுகளை வாழ்நாளில் தவற விட்டிருக்கக் கூடாதெனின், இதுவரை யாதொன்றும் எனக்குத் தோன்றியதில்லை. ஆனால், முதன்முறையாக நான் தவறவிடாத தருணம் என மகிழ்வடைந்த பொழுதிலொன்று கடந்த மாதம் நிகழ்ந்தேறியது. 10.06.2022 அன்று யேர்மனிய நீதிமன்றில் பேராசிரியர் யூட் லால் பெர்னான்டோ நிகழ்த்திய சாட்சிய உரையைக் காணகிடைத்த வாய்ப்பே அது. அதற்குச் சமமான வாழ்த்தை ஒப்புவிக்குமளவிற்கு வேறேதும் சொற்கள் கிட்டவில்லை.

பேராசிரியர் யூட் லால் பெர்னான்டோ பிறப்பால் சிங்கள இனத்தவர். ஆனால், அவர் தமிழனாகப் பிறந்திருந்தால் கூட, எம்மினத்தின் வலிகளை இவ்வளவு ஆழமாக உணர்ந்திருக்கவோ அன்றி பொருளுணர்ந்து கூறவோ வாய்ப்பில்லை. அவரது அறத்தின் மேன்மைக்கு பொருள் கூற முடியவில்லை. அது ஞானத்தின் பாற்பட்டதென்றே நான் எண்ணுகிறேன். கல்விக்கும், புலமைக்கும் அப்பால் அவர் உதிர்த்த சொற்களின் வலிமை, ஆயிரம் பீரங்கிகளை விட வலிமையானது. ஓர் பாதிரியாராக இருந்தபடியே தனது உயர் கல்வியையும், வாழ்க்கையும் ஆரம்பித்த யூட் லால் பெர்னான்டோ, இன்று அயர்லாந்தின் பல்கலைக் கழகமொன்றில் பேராசிரியர். அதற்குமப்பால்; இன, மத வேறுபாடுகளினால் உருவாகும் அனைத்துலகச் சிக்கல்கள் தொடர்பில் ஆய்வு செய்து தக்கார் **(Doctor)** பட்டம் பெற்றவர். பதினைந்து மாணவர்கள் அவரிடம் பயின்று முத்து மாணிப் பட்டம் பெற்றிருக்கிறார்கள். தமிழினத்தின் மீது சிங்கள அரசு நடாத்தி வருகின்ற இனப்படு கொலையையும், அடக்கு முறையையும் அனைத்துலக அளவில் பரப்பிவரும் நடமாடும் ஊடகம் அவர்.

2010ஆம் ஆண்டில் சிறிலங்கா மீதான நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் - 1 ஐ அயர்லாந்தின் தலைநகரில் ஒழுங்கு செய்து, சிங்கள அரசு நடத்திய இன அழிப்புப் போரின் சாட்சியங்களை

# “மேன்மைகொள் தமிழர் நீதி விளங்குக உலகமெல்லாம்”

**யேர்மனிய நீதிமன்றில் பேராசிரியர் தக்கார் யூட் லால் பெர்னாண்டோ அவர்களின் சாட்சியம்.**



வெளிக்கொணர்ந்தவர். தொடர்ச்சியாக 2013 இல் யேர்மனியின் பிறேமன் நகரில் நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் - 2 ஐ ஒழுங்குசெய்து, சிறிலங்காவில் தமிழ் மக்கள் மீது நடாத்தப்பட்டது இனப்படுகொலையே என்ற தீர்மானத்தை நிறைவேற்ற முன்னின்று உழைத்தவர். தமிழீழ விடுதலைப்புலிகள் மீது ஐரோப்பிய ஒன்றியம் விதித்த தடையே தமிழின அழிப்பிற்கு வழிகோலியது என்பதை ஆராய்ந்தறியும் தீர்ப்பாயத்தை அண்மையில் (2022) யேர்மனியில் தலைநகர் பேர்லின் இல் நடத்தியவர். இவரைப் பெரும்பாலும் தமிழர்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை எனச் சொல்வதிலும் பார்க்க, இவரது செயற்பாட்டின் வலிமையை உணருமளவிற்கு தமிழர்களிடம் தூர நோக்கு இல்லை எனச் சொல்வதே பொருத்தமானதாகும்.

இந்நிலையில்; தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு நிதி திரட்டியதாக யேர்மனிய அரசால் குற்றம் சாட்டப்பட்டு, அது குற்றமல்ல என் உரிமை என மறுத்து வாதாடிய நாதன் தம்பி மற்றும் ஆனந்தராசா ஆகியோரது வழக்கின் சிறப்புச் சாட்சியமாக ***(Expert Witness)*** யேர்மனிய நீதிமன்றினால் அங்கீகரிக்கப்பட்டு, அவர் ஆற்றிய உரை இந்நூற்றாண்டில் தமிழர் தரப்பிற்கு நிகழ்ந்த அதிசயம் என்றே கூறலாம். சிறிலங்காவின் குடிமகனாக, பிறப்பால் ஓர் சிங்களவராக அவர் ஆற்றிய அந்த உரை, நீதிமன்றின் பதிவுப் பக்கங்களில் குறிப்பிடத்தக்கப் பதிவாக அமைந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

“நான் பிறப்பால் சிங்களவர். எனது பாடசாலை நாட்களில் எனக்குப் போதிக்கப்பட்ட நூல்களில் தமிழர் விரோதப்போக்கு நிறைந்திருந்ததை நான் கண்டேன்..” என ஆரம்பித்து, அவர் பேசிய ஒவ்வொரு சொற்களும் நிலநடுக்க அதிர்விற்கு ஒப்பானதாகும். 1921 தொடக்கம் தமிழர்கள் மீது சிங்கள இனம் மேற்கொண்டு வருகின்ற அடக்குமுறைகள் பற்றி ஆழமாக விதந்துரைத்த யூட் லால் அவர்கள், இருபதினாயிரத்திற்கும் மேற்பட்ட ஜேவிபி இளைஞர்களைச் சிங்கள அரசு படுகொலை செய்தது பற்றிக்கூறி விட்டு, தனது சொந்த இனத்தவர்களையே படுகொலை செய்த சிறிலங்கா அரசானது, தமிழர்களை விட்டுவைக்குமா? என நீதிபதி அவர்கள் சிந்திக்க வேண்டும் என்று கூறியபொழுது, இவர் உண்மையில் சிங்களவர் தானா? என நீதிபதிக்கே சந்தேகம் எழுந்திருக்கக் கூடும். புலிகள் சமாதானத்தில் கொண்டிருந்த நேர்மை பற்றி நீதிபதியால் கேள்வி எழுப்பப்பட்ட வேளை, அதற்கு யூட் லால் அவர்கள் அளித்த பதிலானது, நீதிபதியிடம் வெறெந்தக் கேள்விகளும் எழுவதற்கான அனுமதியை வழங்கவில்லை.

“நான் 2000 ஆம் ஆண்டின் நத்தார் காலத்தில், வன்னிப் பகுதித் தேவாலயம் ஒன்றில் வழிபாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை புலிகள் ஒருதலைப்பட்சமான போர் நிறுத்தத்தை அறிவித்தனர். அப்பொழுது சிறிலங்கா அரசு அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. பின்னர் போர் நிறுத்தத்தை மேலும் ஓர் மாத காலம் நீடித்து, தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தினர். அப்பொழுதும் சிறிலங்கா அரசு அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. புலிகள் மீளவும் மூன்றாம் மாதம் வரை போர் நிறுத்தத்தை நீடித்தனர். அப்பொழுதும் சிறிலங்கா அரசு தாக்குதல்களைத் தொடர்ந்தது. இக்காலப்பகுதியில் மட்டும் இராணுவத்தின் தாக்குதல்களால் 130 போராளிகளைப் புலிகள் இழந்தனர். பொறுமை இழந்த புலிகள் ஆனையிறவைத் துவம்சம் செய்தனர். அப்பொழுதும் சிங்கள அரசு அடங்கவில்லை. 2001 இல் கட்டுநாயக்க விமான நிலையத் தாக்குதல் நடந்த பின்னரே, சிங்கள அரசு சமாதானத்தை நோக்கி நகர்ந்தது. எப்போதெல்லாம் தமக்கு மீளமுடியாத அடிவிழுகிறதோ, எப்போதெல்லாம் தமது பொருளாதாரம் பாதாளத்தை நோக்கிச் செல்கிறதோ, அப்பொழுதுதான் சிங்கள அரசு சமாதானம் பேச முயல்கிறது. சமாதானத்தை நோக்கி சிங்கள அரசை உந்தித் தள்ளவே விடுதலைப் புலிகள் தாக்குதல்களை நடாத்தினார்கள்..” என்று அறியாப் பேருண்மையை நீதிபதிகளின் முன் போட்டுடைத்தார் யூட் லால் அவர்கள்.

“புலிகளுக்குக் குடிப்பதற்குத் தண்ணீர் கொடுத்தவரும், இராணுவத்தின் பார்வையில் புலிதான்..” என்ற ஒற்றை வாக்கியத்தில் அந்த மண்ணின் இயல்பு நிலையை நீதிபதிக்குக் காட்டிய யூட் லால், சிறுவர்களைப் புலிகள் போரில் இணைத்தனரா? என்ற நீதிபதியின்


BCN TRAVELS (REISEBÜRO)
Consulting Network.ug
(Travels-Business-Worldwide)
RYANAIR
easyJet
KLM
Emirates
AIR CANADA
SINGAPORE AIRLINES
QANTAS
International Monye Transfers
Ria
Worldwide Money Transfer
small world
Last Minute Tickets avaliable on Sunday and Holidays
Tel : 01638714369
Flugtickete und hotel kann man auch hier buchen
Rheinische str-72
44137 Dortmund
023110876360
023110876361
Fax : 023110876362
bcntravels@hotmail.de
People's Insurance
Covid19 Insurance
Health Declaration Form
Ministry of Health - Sri Lanka
SRILANKA, INDIA CANADA, AUSTRALIEN, SINGAPUR, ERUOPEA, UK, USA
AIR FRANCE
Lufthansa
الطيران العماني
OMAN AIR
QATAR AIRWAYS القطرية
AIR INDIA
BRITISH AIRWAYS
www.bcn-travels-dortmund.com

கேள்விக்கு வழங்கிய பதில் சட்டபூர்வமான நேர்த்திக்குரியது.

“நான் புலிகள் இயக்கத்தின் இராணுவக் கட்டமைப்பைப் பற்றி அறிந்தவனல்ல. நான் தேடும் தகவல்கள் அனைத்தும் அந்த மண்ணிலிருந்து பெறப்பட்டவை. சிறுவர்களைப் போரில் ஈடுபடுத்துதல் என்பது வேறு, பயிற்சி அளித்தல் என்பது வேறு. தமிழர் நிலப்பரப்பின் எல்லைப் பகுதிகளில் குடியேற்றப்பட்டச் சிங்கள மக்களின் கைகளில் சிறிலங்கா அரசு பாதுகாப்பிற்கென ஆயுதம் வழங்கிப் பயிற்சியும் வழங்கியது. அப்படியென்றால் அவர்களை சிறிலங்கா இராணுவம் போருக்குப் பயன்படுத்தியதென்று சொல்ல முடியுமா..?” என அவர் தொடுத்த மறுவினாவில் நீதிமன்று சற்று அடங்கியதென்று கூறலாம்.

“பிரேமதாச கொலை பற்றி இன்னமும் புலிகள் மீது சுமத்தப்படும் குற்றத்திற்கு என்ன சொல்கிறீர்கள்?” என வினவிய நீதிபதியை, “புலிகள் பிரேமதாசவைப் படுகொலை செய்யவில்லை என பிரட்மன் வீரக்கோன் என்னும் சிறிலங்காவின் அரசியற் பிரமுகர் வெளியிட்ட அறிக்கையை வாசிக்க வேண்டும்” என யூட் லால் கேட்டுக்கொள்ள, நீதிபதி மறுவினாவிற்குத் தாவ, சிறிது நேரம் எடுத்துக்கொண்டார். “ஐக்கிய நாடுகளின் தீர்மானத்தின் படி, ஓர் இனம் அல்லது தேசியம் ஆக்கிரமிப்பாளர்களால் சிதைக்கப்படும் போது, அதைத் தடுப்பதற்கு அந்த இனம் ஆயுதம் ஏந்துவதில் தவறில்லை” என்பதையும் யூட் லால் விதந்துரைத்தார்.

2009 ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவம் நடத்திய இனஅழிப்புப் போரின்போது, பாதுகாப்பு வலையம் என அறிவிக்கப்பட்ட பகுதியினுள், தஞ்சம் புகுந்த பொதுமக்கள் மீது நடாத்திய பல்குழல் எறிகணைத் தாக்குதலையும், செஞ்சோலை வளாகத்தில் நடாத்தப்பட்ட விமானக் குண்டு வீச்சில் கொல்லப்பட்ட 60 பிள்ளைகளின் அவலச் சாவையும், தன்னால் சிறிதும் ஏற்றுக் கொள்ள முடியாதென்பதை அவர் ஓர் சிங்கள இனத்தவராகப் பதிவுசெய்த விதம், கல்நெஞ்சரையும் கண்கலங்கச் செய்யும் என்பதே உண்மை!.

பேராசிரியர் தக்கார் யூட் லால் அவர்களை, யேர்மனியில் 2022 இல் நடைபெற்ற இவ்வழக்கில் மட்டும் வரையறைக்குட்படுத்தி விட முடியாது. சிறிலங்காவிலும், தமிழீழத்திலும் சமாதானம் நிலவ வேண்டுமெனக் கடுமையாக உழைத்து வருபவர் யூட் லால் அவர்கள். இந்த மனிதரின் அவா என்பது தனிப்பட்ட ஒருவருக்கானதல்ல. அது ஈழத்தமிழர்கள் ஒவ்வொருவருக்குமானது.

சமாதானம் என்ற கடலை நோக்கிப் பாயும் நதியாக அவர் ஓடிக் கொண்டிருக்கிறார். தமிழினத்திற்காக மட்டுமல்ல, உலகில் ஒடுக்கப்படும் ஒவ்வோர் இனத்துடனும் அவர் கைகோர்த்து நின்று, அந்த இனங்களுக்கிடையில் தொடர்பாளனாக இயங்குகிறார். அவர் எம்மினத்தின் சாட்சியாக எழுந்துநின்று பேசுவதற்கு நாம் அனைவரும் செய்யப்போகும் கைமாறு யாதெனில், நாமும் அவர் கைகோர்த்து நின்று இயங்குவதேயாகும்.




சாகித்தியன்

# இவர்களை மன்னிப்பதா? மறப்பதா



> “தமிழ் இனப் படுகொலைக்குத் துணை நின்ற எல்லா தறுதலைகளும் இன்று ஒன்றாகித் தார் மீகம் பேசுகிறார்கள்.”

போராளியா? அரசியல் கோமாளியா? என அரசியல் பேசும் சிவாஜி லிங்கம் இந்திய அரசை, அங்குள்ள அரசியல் கட்சிகளையும், தமிழ் மக்களைக் காப்பாற்ற இந்தியாதான் வேண்டும் என்கிறார். இந்தியாவின் பிரதமர் மோடியின் தாடியும், பா.ஜ.க.வின் காவியும், கமண்டலமும் காப்பாற்றி விடும் என நம்புகிறார்.

அவரைப் போன்றே காயடிக்கப்பட்ட காசி ஆனந்தனும், மறவன்புலவு சச்சிதானந்தனும் அவரது பஜனைப் பண்டாரங்களும், பா.ஜ.க. பசுவின் கோசலத்துக்கும், கோமயத்துக்கும் சொம்புகளோடு அதன் பின்னால் அலைகிறார்கள்.

எங்களை அழிக்கச் சிங்களத் தலைவர்களும், அரசுகளும் கடன் பட்டு விட்டார்களாம், அதனால் அக்கடனை புலம்பெயர் தமிழ் மக்களே அடைக்க வேண்டும் என்கிற மனுநீதியை, நமக்குப் போதிக்கிறார்கள். இதே மனு நீதியின் அடிப்படையில்தான் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் தோற்கடிக்கப் பட்ட ஜேர்மனி, ஜப்பான், இத்தாலியின் வளங்களைச் சுரண்டியும் இராணுவ தளங்களைக் கட்டமைத்தும், தமது சர்வதேச சண்டித்தனத்தைக் காட்டி வருகிறார்கள்.

அவர்களைப் பார்த்த இந்தியாவும், நாக்கைத் தொங்கப் போட்டு சிங்களத்தின் பக்கம் ஆதரவான நிலைப்பாட்டில் ஈழத் தமிழ் இனத்தையும், தமிழகத் தமிழ் மக்களையும் தினமும் வறுத்தெடுத்து வருகிறது. அடிப்படைக் கல்வி அறிவோ, அரசியல் அறிவோ இல்லாத துப்பாக்கி அரசியல் நடத்தும் கூட்டமும், அவற்றின் அடாவடித்தனங்களின் மீது அரசியல் கட்சிகளை நடத்தி வரும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு, தமிழர் விடுதலைக் கூட்டணி போன்ற சந்தர்ப்பவாதிகளும் இந்திய, இலங்கை அரசுகளின் உளவு அமைப்புகளின் அடியாட்களாகவும், ஊது குழல்களாகவும் சர்வதேச அளவில் தமிழ் இன விரோத அழிப்பு பிரச்சாரங்களையும், அறிவியலுக்கும் ஜனநாயக விழுமியங்களுக்கும் பொருத்தமே இல்லாத அரசியல் தீர்வுகளைத் அடிமைப்பட்டு மௌனிக்கப்பட்ட மக்களின் குரலாக டப்பிங் செய்து வருகிறார்கள்.

1980களில் விடுதலைப் போராட்டத்தில், சுரேஸ் பிரேமச் சந்திரன் யாழ் மணிக் கூண்டு

வீதி ஒட்டல் முகாமில் மற்றும் மருதனார் மடம் புன்னாலைக் கட்டுவன் வசாவிளான் கோப்பாய் உரும்பிராய் பகுதிகளில் இந்திய அமைதிப் படையின் ஏவல் வேட்டை நாய்களாக செயற்பட்டதும், மகிந்த ராஜபக்ஷ தயவில் சாராயக் கடைகள் நடத்தியதும், அவர் மறந்து விட்ட தமிழீழப் போராட்டத்தின் மறைக்கப் பட்ட பக்கங்கள். ஆனால், ஆண்டுதோறும் அவரது வீர மறவர்களின் நினைவெழுச்சி நாள் எங்கோ, யாரோ கொண்டாடித் தமிழ் மக்களுக்கு மூளைச் சலவை நடத்தி வருவதைக் காண்கிறோம்.

இப்படித்தான் பரந்தன், ராஜன், மாணிக்கதாசன், டக்லஸ் தேவானந்தா, உமா மகேஸ்வரன் போன்ற உத்தமர்களின் வரலாற்றுச் சாதனைகளும் மாலைத் தீவுப் புரட்சியும் வறிய மக்களுக்கான உணவுப் பொட்டலங்கள் என்றும், பள்ளிச் சிறுவருக்கானக் கற்றல் கருவிகள், விளையாட்டுப் பொருள்கள் என்றதும் தாயாகச் செய்திகளாக வெளியாகி வருகின்றன.

இப்படியான களத்தில் அண்மையில் மக்கள் விடுதலை இயக்கத் தலைவர் அனுர குமார திசர நாயக்கா யாழ்ப்பாணம் சென்று, கோட்ட பாயாவை விரட்டத் தமிழரும் ஒன்று திரள வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார். இவரது கடந்த கால அரசியலே தமிழ் மக்களை இனரீதியாக வறுத்தெடுக்கும் அரசியலாக கோட்ட பாயா, மகிந்த ராஜபக்ஷ, ரணில், சந்திரிகா ஜே.ஆர். போன்றவர்களை ஏப்பம் விடும் அரசியலாகவே இருந்துள்ளது.

அப்படிப் பட்டவரின் யாழ் விஜயம் என்பது, எந்த ஒரு நல்லெண்ணத்தின் வெளிப்பாடு? எனச் சொல்ல முடியாது. ஏனென்றால் முதல் திருடன், கொலைகாரன், கொள்ளைக்காரன் போன்ற பெருமைகளுக்கு இலங்கைத் தீவின் சிங்கள இனத்தின் நாயகன் எனப் புகழப்படும் விஜயனும், அவனது கூட்டாளிகளின் விந்தில் உருவான சிங்கள இனத்திடம், அவனது தந்தையான சிங்கத்தின் விந்தில் தோன்றிய சிங்கள இனத்திடம் மிருக குணத்தைத் தவிர வேறு எதனை எதிர்பார்க்க முடியும்?

ஆனால், இவை அனைத்தையும் அறியாத பிச்சைக்காரக் கூட்டம், யாழ்ப்பாணத்தில் இந்தச் சங்க இனவெறியனின் பின்னால் அவனது கபடப் பேச்சுகளைக் கேட்க அலையும் கூட்டம் உள்ளதையும் இந்தச் செய்திப் படம் உறுதிப் படுத்துகிறது.

இவை எல்லாவற்றையும் கண்டிக்கும் தமிழரின் இனம் ஒன்றை நாம் அனைவரும் இணைந்து உருவாக்கினால் மட்டுமே எம் இனம் இவ்வுலகில் அழியாமல் வாழும் நிலை உருவாகும்.




24 மணிநேர தகவல் உதவிச் சேவையுடன்



300 க்கும் மேற்பட்ட Channels மற்றும் 5,000க்கும் மேற்பட்ட திரைப்படங்கள்

இப்போது அனைத்து நாடுகளிலும்




வாராந்தம் புத்தம்புது திரைப்படங்கள்,
உங்கள் அபிமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்
ஆகிய அனைத்தையும் கண்டுகளிக்கலாம்

**REACH OUR DISTRIBUTORS**

**OFFICE :**
0044 2037 690498

**UK :**
0044 7882274040
0044 7723229209

**SWISS :**
0041 4455 14321

**GERMANY :**
0049 15146978484
0049 17670334213
0049 62063052893

**FRANCE :**
0033 782775490
0033 977195911

**NETHERLANDS, BELGIUM, LUXEMBOURG :**
0031 621604168

**ITALY :**
0039 3510257812

**DENMARK :**
0045 20829548
0045 20718780



சண் தவராஜா





# கோத்தா தப்பியோட்டம் தீர்கிறதா பிரச்சனை?

சிறிலங்காவின் அரசியல் நிலவரம் தொடர்ந்து கொதி நிலையிலேயே இருந்து கொண்டிருக்கின்றது. முன்னாள் அரசுத் தலைவர் கோத்தாபயவை வீட்டுக்கு அனுப்பும் போராட்டக் காரரர்களின் கோரிக்கை வெற்றி பெற்றுள்ள போதிலும், அவர்களின் விருப்பத்துக்கு உரியவராக இல்லாத ரணில் விக்கிரமசிங்க தற்காலிக அரசுத் தலைவராகப் பதவியில் அமர்ந்திருப்பது, தங்களின் வெற்றியை முழுமையாக அனுபவிக்க முடியாத நிலைக்குப் போராட்டக்காரரர்களைத் தள்ளியிருக்கின்றது. "கோத்தாவை வீட்டுக்குப் போ" எனச் சொல்வதற்குக் காரணமாக அமைந்த விலைவாசி உயர்வு, உணவுப் பொருட்கள் மற்றும் எரிபொருளுக்கான தட்டுப்பாடு உள்ளிட்ட விடயங்கள் இன்னமும் தீர்க்கப்படாமல் உள்ள நிலையில், நாளை என்ன நடக்கும்? என்பதை எதிர்வுக்கூற முடியாத நிலையில் சிறிலங்கா அரசியல் உள்ளது.

சிறிலங்காவின் இன்றைய அவலத்துக்கு மூல காரணம் தீர்க்கப்படாது உள்ள இனப் பிரச்சனையும், அதன் பக்கவிளைவாக மூன்று தசாப்தங்கள் நீடித்த போரை வெற்றி கொள்வதற்காக வாங்கப்பட்ட பெருமளவு கடனுமே என்பது, இன்று அரசியல் களத்தில் உள்ள அனைவருக்குமே தெரிந்த விடயமாக உள்ள போதிலும், அதனைப் பற்றிப் பொது வெளியில் பேசுவதை அரசியல்வாதிகள் கவனமாகத் தவிர்த்து வருவதை அவதானிக்க முடிகின்றது. நாட்டின் அனைத்து அவலங்களுக்குமே ராஜபக்ஷ குடும்ப ஆட்சியே காரணம் எனச் சாதிக்கப்பட்டு கிட்டத்தட்ட அவர்கள் அனைவருமே அரசியலில் இருந்து ஓரங்கட்டப் பட்டுள்ளனர். ராஜபக்ஷ குடும்பம் அனைத்துத் தடைகளையும் தாண்டி, மீளெழுந்து வருமா? இல்லையா? என்பது பொறுத்திருந்து பார்க்கப்பட வேண்டிய விடயம்.

மக்கள் எழுச்சிக்கு முகங் கொடுக்க முடியாத நிலையில் கோத்தாபய தப்பியோடினாலும், தனது பதவியை இராஜினாமாச் செய்திருந்தாலும், அவரது விருப்பத்துக்கு ஒருவரான ரணில் விக்கிரமசிங்கவிடமே பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டிருப்பது, ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு ஆறுதலான விடயமாக இருக்கக் கூடும். ஆனால், அதுவே ரணில் விக்கிரமசிங்க பதவி விலக வேண்டும் எனக் கோருவோரின் கோரிக்கைக்குப் பலமான காரணமாகவும் உள்ளது. ரணில் பதவி துறக்க வேண்டும் என்ற கோரிக்கை போராட்டக்காரரர்கள் மத்தியில் இருந்து மாத்திரம் எழவில்லை. மாறாக, நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் பல்வேறு எதிர்க் கட்சிகள் மத்தியில் இருந்தும் எழுந்திருக்கின்றது. தமிழ் மக்களின் பிரதான கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கூட, ரணில் விக்கிரமசிங்க பதவி விலக வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே உள்ளது.

ஆனால், இன்றைய நிலையில் அது நடக்குமா? என்ற சந்தேகமே எழுகின்றது. தற்போதைய நிலையில் எதிர்க் கட்சிகள் பிளவுண்டு கிடக்கின்றன. சர்வ கட்சி அரசாங்கம் அமைப்பது தொடர்பாகவும், அதன் சார்பில் சஜித் பிரேமதாசாவை அரசுத் தலைவர் வேட்பாளராக நிறுத்துவது தொடர்பாகவும்

பேசப்பட்டு வந்தாலும், அதனைத் தீர்மானிக்கும் இடத்தில் இன்னமும் பொதுஜன பெரமுன கட்சியே உள்ளது. அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாருக்கு வாக்களிக்கின்றார்களோ, அந்த வேட்பாளர்களே அரசுத் தலைவராகவும், தலைமை அமைச்சராகவும் தெரிவு செய்யப்படுவர்.

புதிதாகத் தெரிவு செய்யப்படும் அரசாங்கம் அல்லது அரசுத் தலைவர், நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண வேண்டிய பொறுப்பில் உள்ளது. அது மட்டுமன்றி ஆர்ப்பாட்டக்காரர்கள் கோருவதைப் போன்று ராஜபக்ஷ குடும்பத்தினரின் ஊழல்கள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தாக வேண்டிய நிர்ப்பந்தத்திலும் உள்ளது. இந்த விடயத்தைச் சமாளிக்க ரணில் போன்ற ஒருவர் அரசுத் தலைவர் பதவியில் இருப்பதையே ராஜபக்ஷ குடும்பம் விரும்பும் என்பது சொல்லாமலேயே புரியும்.

மறுபுறம், கடந்த நூறு நாட்களாக நடைபெற்ற சம்பவங்களின் பின்னணியில் மக்கள் விடுதலை முன்னணி, முன்னிலை சோசலிசக் கட்சி என்பவற்றின் நேரடியான பங்களிப்பு இருந்த போதிலும், மறைகரமாக அமெரிக்கா மற்றும் இந்தியா ஆகியவற்றின் ஈடுபாடும் இருந்தமையை மறைப்பதற்கில்லை. சிரமமெடுத்து பல்வேறு பின்னணி வேலைகளில் ஈடுபட்ட இத்தகைய சக்திகள், தங்கள் விருப்புக்கு உரிய ஒருவரையே பதவியில் அமர்த்தி அழகு பார்க்கும் என்பது, சிறு பிள்ளைக்கும் தெரியும். அவர் யார்? என்பது அடுத்துவரும் சில நாட்களிலேயே எமக்கும் தெரியவரும்

பொருளாதார நெருக்கடியைச் சந்திக்கும் ஒரு நாட்டில், நிலையான அரசியல் நிலவரம் இருக்க வேண்டியது முன்நிபந்தனையாகின்றது. ஆனால், சிறி லங்காவைப் பொறுத்தவரை அரசாங்கப் பிரதிநிதிகளுக்கிடையேயும், எதிர்க் கட்சிகளுக்கிடையேயும் நிலவும் ஒற்றுமையின்மை வெளிப்படையாகவே தெரிகின்றது. இத்தகைய பின்னணியில் ரணிலின் ஆளுமை தொடர்பாகவும், அனுபவம் தொடர்பாகவும் அளவுக்கு அதிகமாகப் பேசப்படுவதை அவதானிக்கும் போது அமெரிக்காவுக்கும், இந்தியாவுக்கும் அணுக்கமான நபராக அவரே இருப்பார் என்பதை ஊகிக்க முடிகின்றது.



சிறிலங்காவில் அண்மையில் நடைபெற்ற போராட்டம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது என்பதில், மாற்றுக் கருத்து இருக்க முடியாது. சுதந்திரம் பெற்ற நாள் முதலாக பேரினவாதச் சிந்தனையோடு பயணித்த, அரசியலில் முதல் தடவையாக இனவாதத்தைக் கடந்து ஒன்றுபட்ட அரசியல் நிலைப்பாடு வெளிப்பட்ட தருணம் இதுவே!. அத்தகைய நிலைப்பாடு தொடர்ந்தும் நீடிக்குமா? என்ற சந்தேகம் உள்ள போதிலும், அத்தகைய போக்கு நீடிக்க வேண்டும் என்றே இனவாதம் கடந்த முற்போக்கு சக்திகள் விரும்புகின்றன.

எனினும், போராட்டத்தின் அறுவடையை, அதன் நோக்கத்தைச் சிதைத்து விடும் கூறுகள் ஆங்காங்கே தென்படத் தொடங்கிவிட்டன என்பதை, அண்மைக் காலச் சம்பவங்கள் காட்டி நிற்கின்றன. போராட்டத்துக்குத் தலைமை தாங்கும் இரு பிரதான சக்திகளான மக்கள் விடுதலை முன்னணி மற்றும் அவர்களின் முன்னாள் தோழர்களின் கட்சியான முன்னிலை சோசலிசக் கட்சி என்பவற்றுக்கு இடையிலான பூசல் வெளிப்படையாகவே தெரிகின்றது.

இந்தப் போராட்டத்தின் நோக்கத்தைச் சிதைத்து, போராட்டக்காரர்களின் ஒற்றுமையை, வலிமையைக் குன்றச் செய்வதற்கு பிரித்தாளும் தந்திரத்தைப் பாவிப்பதற்கான எளிய வழியை இந்தப் பூசல் வழங்கக் கூடும் என்ற அச்சம் உள்ளது. அது மாத்திரமன்றி - ரணில் அடிக்கடி கூறுவது போன்று - அரசியலமைப்புக்கு உட்பட்டு இந்தப் போராட்டத்தின் வெற்றிகளை நடைமுறைப்படுத்துவதிலும் சிக்கல்கள் உள்ளன. சட்டவாட்சி என்ற தராசில் வைத்துப் பார்க்கும் போது, போராட்டக்காரர்களின் பல்வேறு நடவடிக்கைகள் சட்டத்துக்கு முரணானதாகவே பார்க்கப்படும் அபாயமும் உள்ளது.

மக்களே மகத்தான சக்திகள் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. சர்வாதிகாரிகளாக இருந்து கொண்டு, மக்களை மாக்களாக நினைத்து ஆட்சி செய்த பல சர்வாதிகாரிகளையும், மக்களின் எழுச்சி மண் கவ்வச் செய்த சம்பவங்கள் வரலாற்றின் பக்கங்களில் நிறைந்து கிடக்கின்றன. ஆனால், மக்கள் எழுச்சியினால் சர்வாதிகாரிகள் சரிக்கப்பட்டார்கள் என நவீன வரலாற்றில் எழுதப்படுவதை, உலகின் வலிமையான நாடுகள் விரும்புவதில்லை. ஏனெனில், ஜனநாயக முகமூடிகளை அணிந்துகொண்டு எதார்த்தத்தில் சர்வாதிகார ஆட்சியை நடத்திவரும் அத்தகைய நாடுகள், ஏனைய நாடுகளின் மக்கள் எழுச்சிகளை முன்னுதாரணமாகக் கொண்டு தமது நாட்டிலும், தமது ஆட்சிக்கெதிராக மக்கள் எழுச்சி கொண்டுவிடக் கூடாது என்பதில் அவதானமாக உள்ளன.

சிறிலங்கா மக்கள் எழுச்சியின் வரலாறும் இவ்வாறே வரலாற்றில் எழுதப்படுவதை அத்தகைய சக்திகள் விரும்பக் கூடும். எனவே, இன்று அமைதியான போராட்டக்காரர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்போம் என்ற ஆட்சியாளர்களின் குரல்களில் மாற்றம் வருவதற்கு வாய்ப்பு உள்ளது. அவர்களே தங்கள் முகவர்களைப் பாவித்து, போராட்டத்தில் குழப்பங்களை உருவாக்கி, இரும்புக் கரம் கொண்டு அவர்களை அடக்கும் நாள் வெகுவிரைவில் உருவாகலாம்.

ஆனால், கடந்த நூறு நாட்களில் சிறிலங்காவின் பல்வேறு இடங்களிலும் ஒன்று கூடிய மக்கள் மத்தியில் விதைக்கப்பட்டுள்ள புரட்சிகரக் கருத்துகளை யாரும், எதுவும் செய்துவிட முடியாது. அது தொடர்ந்து அவர்கள் மனங்களில் கனன்று கொண்டேயிருக்கும். அது காட்டிடை வைத்த அக்கினிக் குஞ்சாக ஒருநாள் நாடு முழுவதும் பற்றி எரியும்.



CENTURY
TRAVELS



இந்தியாவுக்கான விசா
ஒழுங்கு செய்து தரப்படும்



திகதி மாற்றம்
இலவசம்

**Date Change**
**FREE**

4 கிழமைக்குள் பணம்
திருப்பித் தருதல்

**Refund Within**
**4 WEEKS**

இலங்கை விசா
~~60~~ 40

Srilanka Visa
~~60~~ 40

# SUMMER 2022

## Frankfurt Direct Flights

**Nishanthan 0176 2168 2149**

0231 58 96 557 | 0231 55 74 319

Rheinische Str.29-44137-Dortmund | www.centurytravels.de | info@centurytravels.de


BOX
ONE MONTH FREE
TALK TIME TO 132
COUNTRIES, INCLUDING
INDIA AND SRILANKA,
FOR EVER
V BOX PURCHSED
IN GERMANY.
SUPER
SALE
IN GERMANY
FREE
TALK
TIME
119 €
ONLY
CALL
+49 1514 6978484